
557

# ஒளிவிளக்குகள்



557
1-55
14 SEP 1955
w
N54
120701

டர் பா. நடராஜன்

கண்ண

# ஒளி விளக்குகள்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
10 FEB 1955
MADRAS

டாக்டர். பா. நடராஜன், எம். ஏ. டி. லிட்.
ஆந்திர அரசாங்கப் பொருளாதார ஆலோசகர்.

பொற்றாமரைப் பதிப்பகம்,
32, ஹைரோடு எழும்பூர்
சென்னை-8.

முதற்பதிப்பு ஜூன் 1954.

120701

விலை ரூபாய் ஒன்று

கிடைக்குமிடம்:

பவானி அச்சகம்

எழும்பூர் சென்னை-8

# பதிப்புரை

பேறுடுகளிலும் இந்திய நாட்டிலும் ஒவ்வோர் நூற்றுண்டிலும் சான்றேர் சிலர் தோன்றுகின்றனர். அவர்கள் தமது உலேயா உழைப்பாலும், கூரிய அறிவின் திறமையாலும், தன்னலம் கருதாத் தன்மையாலும், அஞ்ஞான இருளகற்றும் மெய்ஞ்ஞான விளக்குகளாகப் பொலிகின்றனர். அவர் ஏற்றிய அறிவு விளக்குகள் உலகு உள்ளளவும் சுடர் விட்டு ஒளி வீசுகின்றன. அவ்வொளியால் மக்களின் மன இருள் மாய்கின்றது; வாழ்வுப் பாதை வகுக்கப்படுகிறது. வாழ்க்கை வளம் படுகிறது. சமூகம் முன்னேற்ற முறுகின்றது. சமுதாயம் நலமடைகிறது.

இவ்வாறு உலகுக்கு ஒளியூட்டும் அறிஞர்கள் தாம் எடுத்த பணியிலே வெற்றியடைவது வரையிலும் எய்திய இடையூறுகள் எண்ணில. மக்களால் ஏசவும் இகழ்ந்து பேசவும் படுகின்றனர். ஊரையும் நாட்டையும் விட்டுத் துரத்தவும் படுகின்றனர். மக்கள் தமது குறுகிய அறிவுக்கண்ணுல் அவர்பால் குறைபல காணுகின்றனர். பொருமையும் பொச்சரிப்பும் கொண்டு அவ்வறிவு விளக்குகளே அழிக்கவும் முயல்கின்றனர்.

இத்தகைய மக்களின் கொடிய புயலேயும், சூருவளியையும் கன்மாரியையும் பொறுத்துக் கலங்காது பணி செய்து வெற்றி பெற்றேரே சான்றேராய் விளங்குகின்றனர். இவ்வரிசையில் மூன்று சான்றேர்களே டாக்டர். பா. நடராஜன் அவர்கள் நமக்குக் காட்டுகிருர்.

மேலை நாட்டு இலக்கியத்தில் புதிய உணர்ச்சியை யும் வேகத்தையும் எழுப்பியவர் **ஜியார்ஜு பெர்னாட்ஷா.** நாட்டாரும், கேட்டாரும் தம் கொள்கைகளை ஏற்க மாட்டாரரோ என அவர் கலங்கவில்லை. வாழையடி வாழையாய் ஆங்கில அறிஞர்கள் போற்றி வந்த புலவர்களையும் அலசி ஆராய்ந்து உண்மை காண முயன்றார்; அதனைப் பளிங்கென எடுத்தும் காட்டினார். அவர் தம் குறை களைந்து நிறைவானவற்றைப்பேசினார்; எழுதினார்; இருபதாம் நூற்றாண்டில் தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாதமுறையில் இலக்கியத்துறையில் திகழ்ந்தார். அளப்பரிய செல்வத்தைக் கலைமகள் அவருக்கு அளித்தாள். புலமையால் பொன்னும் புகழும் ஈட்டிய மேதை **பெர்னாட்ஷா.** ஆனால் அவர் வாழ்க்கை ஏழை குமஸ்தாவிலிருந்து ஆரம்பமாயிற்று என்பதை மறக்கலாகாது.

**ஷாவின்** பின்னர் மருத்துவத் துறையில் புதுத் துறையைக் கண்ட அறிஞர் பெருந்தகையைக் காண் கிறோம். பார்த்தாலும், பக்கத்தில் நின்றாலும், நின்று நினைத்தாலும் தொட்டாலும், மனநோய், உடல்நோய் மாற்ற வல்ல மருத்துவம் கண்ட **மெஸ்மர்.** அவர் செல் வக் குலத்திலே பிறந்தார்; சிந்தனையிலே ஆழ்ந்தார். தாம் கண்ட உண்மையை வெளியிட்டமைக்காகத் தூற் றவும் போற்றவும்பட்டார். மெய்ப்புகழ் வந்தபோதும், மேலலார் இகழ்ந்த போதும் ஒத்திருக்கும் உள்ளத்துர வோனாய்த் திகழ்ந்தார் மெஸ்மர். அவர் வாழ்வும் அவர் கண்ட வசியமும் மாநில மக்கட்கு ஒளி வழங்குவன.

மேனாட்டு இருமேதைகளைப் போலவே இந்திய நாட்டில் தோன்றி எளியவராய்வாழ்ந்து பொன்னையோ புகழையோ நாடாது அறிவுக்கே தன் வாழ்வை அர்ப் பணித்த அறிஞர் **எஸ். எஸ். பிள்ளை** அவர்களையும் இங்கே காண்கிறோம்.

இந்திய நாட்டு மக்கள் அவர் கணித நுணுக்கத்தைப் பாராட்டாதிருந்த நாளில் மேனாட்டறிஞர் அதனைப் பெரிதும் போற்றினர். அவரைச் சிறப்பிக்கச் சிந்தை கொண்டனர். அவர் தம் கணித நுணுக்கத்தை அறிந்து பயன்படுத்தக் கருதினர். ஆனால் கொடிய காலனுக்கு அது பொறுக்கவில்லை. வானவூர்தியில் மேனாடு சென்ற எஸ். எஸ். பிள்ளை அவர்களை வழியிலேயே கவர்ந்து விட்டான். கண்ணீர் வடித்தலன்றிச் செய்யத்தக்கது யாது?

டாக்டர். பா. நடராஜன் அவர்கள் இம்மூவர் வாழ்வையும் இந்நூலிலே சுருங்கத் தருகிறார். அவர் வாழ்வால் மக்கள் அறிய வேண்டியவற்றை வற்புறுத்திச் செல்லுகின்றார். அவர் தம் வாழ்க்கையை வடித்த சாற்றிலே வரலாற்றைத் திரட்டித்தருகிறார். எனவே இந்நூல் பாழ்பட்டு வறுமை மிஞ்சிய தமிழகத்திற்குச் சிறந்த வழிகாட்டியாகும். உழைப்பின்றி உறங்கிக் கிடக்கும் மக்களுக்கு உணர்ச்சியூட்டி வாழ்வுப் பாதையில் செல்ல வழி வகுப்பதாகும்.

ஆதலின் இந்நூலை வெளியிடுதலில் மிக்க மகிழ்ச்சியடைகிறோம். இதனை வெளியிடும் உரிமை தந்த டாக்டர். பா. நடராஜன் அவர்கட்கு எங்கள் நன்றி.

—பொற்றாமரைப் பதிப்பகம்.

# பெர்ஞட் ஷா

1950 ஆண்டு நவம்பர் மாதம் முதல் நாளோடு ஆருண்டு குறைய ஒரு நூருண்டு முடிந்தது. ஜார்ஜ் பெர்ஞட் ஷா தனது 94-வது ஆண்டில் காலமானுர். செய்தி கேட்டு அதிர்ச்சியும், ஆச்சரியமும் அடைந்த தாகப் பலதலைவர்கள் சொல்லுகிருர்கள். இதுவழக்கமாகப் பெரியவர்கள் இறந்த போதெல்லாம் பத்திரிகைக்கு விடும் ஒரு சரமச் செய்தி. உண்மையில் அதிர்ச்சியும் ஆச்சரியமும் அடைவதற்கு ஒன்றுமில்லை. நல்ல பழுத்த வயது. 'மனிதர்க்கு வயது நூறல்லதில்லை' என்ற கபிலர் எல்லையையும் எட்டிப் பிடித்துவிட்டார். தள்ளாத இந்த 94-வயது வயதிலே, தோட்டத்தில் உலாவுகையில் விழுந்து அடிபட அதற்காக ஆப்பரேஷன் செய்ததாகக் கேள்விப்பட்ட அன்றே அவர் மரணச் செய்தியைக் கேட்க என்மனம் பக்குவமாகி விட்டது. அவர் இறந்துவிட்டார் என்பதல்ல ஆச்சரியம்; எப்படி அவர் பிழைப்பார் என்று டாக்டர்கள் நம்பிஞர்கள், எதிர்பார்த்தார்கள் என்பது தான் ஆச்சரியம்.

நூற்றிருபது ஆண்டுகள் உயிரோடு வாழ்வேன் என்ருர்; தொண்ணூற்றிநாலு வயதில் போய் விட்டாரே என்ற ஏமாற்றம்; இதில் எழுந்தன அதிர்ச்சியும் ஆச்சரியமுமாக இருக்கலாம். இப்படி எத்

தனையோ பேர்தான் கோட்டை கட்டினார்கள்; திட்டமிட்டார்கள். ஒருவரேனும் முழு வெற்றி பெறவில்லை. காந்தி அடிகளும் நூற்றிருபது ஆண்டு வாழ்வேன் என்றார். எண்பது ஆண்டில் குண்டுக்கிரையாகி மடிந்தார். 'நூறாண்டு வாழ்வதெங்ஙனம்' என்ற நூலை எழுதி வாழ்க்கையைப் பூப்போல் நடத்தினர் மறைமலை அடிகள். எழுபத்தைந்து வயதிலே மறைந்தார். 'மரணமில்லாப் பெரு வாழ்வு வாழ்வேனெ'ன்றார் வள்ளலார். காயம் மறைந்த மாயம் தெரிய வில்லை. கோட்ஸே கொன்றழிக்கும் செயல் செய்திராவிட்டால் காந்தி அடிகள் இன்னும் வாழ்ந்திருக்கக் கூடுமே, தவறி விழுந்திராவிட்டால் அல்லது அதற்காக மருத்துவர் தள்ளாத பருவத்தில் அறுவை வைத்தியம் செய்திராவிட்டால், பெர்னாட்ஷாவும் இன்று உயிரோடிருந்திக்கக் கூடுமே என்றெல்லாம் மனம் வாதனை செய்கிறது. ஆனல் அது தான் வாழ்வின் மர்மம். வரையறுத்த நாளை மீறி எவனும் வாழ்ந்ததில்லை. மார்க்கண்டன் கதையைக் கூறினும் மதி விதியையே நம்புகிறது. மார்க்கண்டன் இன்றெங்கே? நூறாண்டு வாழ்ந்தான் என்றே இருப்பதல்லால் இறவாத வாழ்வு பெற்றானென்றில்லை. சிரஞ்சீவிகளென்று தெய்வவாழ்த்துப் பெற்ற அநுமன், விபீடணன் முதலியோரெங்கே? சிரஞ்சீவி என்றது அவர் புகழுடம்புக்கா அன்றிப் புலாலுடம்புக்கா?

ஆனல் புது விஞ்ஞானம் வேறாய்க் கூறுகின்றது. உடலையும் உள்ளத்தையும் நெறிப்படுத்தி

வாழ்வைச் செப்பனிட்டால், பல்லாண்டு வாழலாம் என்கிறது. வாழ்வை அரித்துத் தின்னும் பசி, பிணி, அசுத்தம் போன்றவற்றுக்குச் சமூக மருந்து கண்டு சென்ற நூற்றாண்டுப் பிற்பகுதியிலிருந்து மேலை நாடுகள் பல, மக்களின் சராசரி வாழ்வை நீடிக்கச் செய்திருக்கின்றன என்று ஆதாரம் காட்டுகிறது. நியூஜிலந்தில் சராசரி மனித வாழ்க்கை எழுபத்தைந்து வயதாயிருக்க, இந்தியாவில் மட்டும் இருபத்தாறாக இருப்பானேன்? நமது நாட்டு வித்தகச் சித்தர்களும் காயசித்திகள் பல செய்து இளமையைக் காத்து வந்திருக்கின்றனரே? அங்ஙனமானால் காலனை வெல்லும் விஞ்ஞான உபாயமும் வாராதோ? ஒருக்கால் ஒருசில ஆண்டுகள் வாழ்வை நீட்ட முடியும் போலும். முற்றும் மரணத்தைத் தாண்ட முடியுமென்ற நம்பிக்கை பிறக்க மறுக்கிறது. எல்லா அற நூல்களும், எல்லா அனுபவங்களும், நிலையாமை, யாக்கை நிலையாமை, இளமை நிலையாமை, செல்வ நிலையாமை என்றே சொல்லிப்போய் விட்டன.

அடவிதனிற் புகுந்திடினும்
அடுக்கன் முழைநுழைந்தாலும்
இடைநிலவு சேய்மை நிலத்
தெய்திடினும் எறி தரங்கக்
கடலதனின் மூழ்குறினுங்
காலமது வருங்காலை
உடலொழியும் இறப்பதனே
டொற்றுமையதாகலினால். (சேது புராணம்.)

ஆனால் ஒன்று மட்டும் உறுதி: கட்டுப்பாடான வாழ்க்கை வாழ்ந்தால் இறக்கு மட்டும் மனிதன் நோயற்ற சுகவாழ்வு வாழலாம். தளராத ஊக்கத் தோடு இறுதிவரை உழைக்கலாம்.

பெர்னுட்ஷா ஏறக்குறைய ஒரு நூருண்டு வாழ்ந்தார். உண்மையில் அவர் மூன்று நான்கு நூருண்டுகள் வாழ்ந்தார் என்றே சொல்ல வேண் டும். எந்த மனிதன் வாழ்வும் அவன் வாழ்ந்த காலத் தோடு பிணைக்கப் பட்டிருக்கிறது. பத்தொன்ப தாம் நூற்ருண்டின் நடுப்பகுதியில் அவர் ஐயர்லாந் தில் பிறந்தபோது, பதினேழாம் நூற்ருண்டின் நடுப்பகுதியில் நிலைமைகள் எவ்வாறிருந்தனவோ அவ்வாறே யிருந்தன. இருபதாம் நூற்ருண்டின் நடுப்பகுதியில் அவர் இறந்த பொழுது இருபத் தோராம் நூற்ருண்டார் பெறும் சிந்தனைச் செறி வைப் பெற்று விட்டார். இருபதாண்டில் ஒருவன் புரட்சிக்காரனுக இருக்கிருன், நாற்பதாண் டில் பிற்போக்காளனுகி விடுகிருன்—என்பது ஒரு பழமொழி. ஷாவைப் பொறுத்தவரையிலும் இது பொய்த்து விட்டது. நூருண்டுபோதும் இளைஞ ரும் பொருமை கொள்ளும் முற்போக்காளராய் ஒளிர்ந்தார். ஆண்டு முதிர்ந்தது; அறிவு வளர்ந்தது; சிந்தனை மட்டும் மூவா இளநலம் முகிழ்த்தது. நாளைச் செவ்வாய் மண்டலத்தோடு போக்குவரத்து ஏற் பட்டு விட்ட தென்ருல், முதன் முதல் பயணம் புறப் படுகிறவர் பெர்னுட் ஷாதான் என்று அவர் சரித் திரிகர் ஒருவர் எழுதியுள்ளார்.

அவர் பிறந்தது ஐயர்லாந்தின் தலைநகரான டப்ளினில். பெருவாழ்வும் பேரும் பெற்றது ஆங்கில நாட்டின் தலைநகரான லண்டனில். ஆயினும் அவரை ஐயர்லாந்து தேசத்தவரென்றோ ஆங்கிலேய நாட்டவரென்றோ சொல்லிவிட முடியாது. அவர் உலகமகன். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற பெருநோக்குடைய அழியாப் பரம்பரையில் தோன்றியவர்.

பெருமேதை. உலகமக்களின் சிந்தனையைக் கவர்ந்தவர். சிந்தனைத்திறனால் பெருஞ் சீர்திருத்தங்கள் ஏற்படுவதைக் கண்டவர். ஷேக்ஸ்பியருக்குப் பிறகு, ஒப்பாருமிக்காருமில்லாத நாடக ஆசிரியர் என்று அழியாப்புகழ் படைத்தவர். ஏழையாகப் பிறந்து எழுத்தால் பெருநிதியம் குவித்தவர். பள்ளிப் படிப்பைச் சரியாக முடிக்க இயலாதஅவர், பல்கலைக்கழகங்கள் வணங்கும் புலமை எய்தியவர். இலக்கிய நோபல் பரிசு பெற்றவர். இத்தனைக்கும் அடிப்படையாக இருந்த அவர் மேதை கருவிலே பிறந்த திருவல்ல; உழைப்பில் விளைந்த அருங்கனி. "என்னைப்போல் உழைக்கத் தயாராக இருந்தால் எவரும் என் எழுத்துத் திறனைப் பெறமுடியும்; சிலர்என்னைவிட எளிதாகக்கூடப் பெறலாகும்" என்று உழைப்பால் தான் உயர்ந்த வரலாற்றை விளக்கி யிருக்கிறார்.

நாளொன்றுக்கு ஐந்து பக்கம் விடாது எழுதுவார். மழையாயினும் வெய்யிலாயினும் இடைவிடாது இதைச் செய்வார். தினம் ஏழெட்டு மணி

நேரம் பிரிட்டிஷ்ப் பொருட்காட்சி சாலையிலமைந்த நூல்நிலையத்திற் சென்று பயில்வார். இப்படியாகப் பல ஆண்டுகள் விடாது உழைத்தார். இரண்டு உறுதிப்பாடுகளே இந்தச் சலியா உழைப்புக்கு ஊன்று கோலாயிருந்தன. அவை

எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
திண்ணிய ராகப்பெறின்
எண்ணித்துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவ மென்ப திழுக்கு

என்ற இரு குறட்பாக்களில் அமைந்தனவேயாம்.

எப்படியும் நம்மால் எண்ணியதை எய்தமுடியும், அதற்குரிய ஆற்றல் நம்முள்ளே இருக்கிறது என்ற திடமான தன்னம்பிக்கையோடு இனிமேல் எல்லை காணும் வரையிலும் படிப்பது, சிந்தனை செய்வது, எழுதுவது என்பவன்றி, வேறெந்தத் தொழிலையும் தாங்கரிய வறுமைவரினும் மேற்கொள்ளப் போவதில்லை என்ற அதிதீவிர தீர்மானம்.

நில புலன்களை வாங்கல் விற்றல் செய்யும் ஒரு ஏஜண்டின் ஆபீசில் கணக்கப்பிள்ளையாக வாழ்க்கை தொடங்கியது. தந்தை மொத்த வியாபாரி. பேர்தான் மொத்த வியாபாரியே ஒழிய சில்லறை வியாபாரிகளுக்கு வரும் வருவாய் கூடக் கிடையாது. பெரிய குடிகாரர். கடைசியில் வியாபாரம் கெட்டு விட்டது. தாய் இசைப் பயிற்சி உடையவள். தன்

மற்றக் குழந்தைகளை அழைத்துக்கொண்டு லண்டனில் இசைப் பயிற்சியால் பிழைக்கச் சென்றுவிட்டாள். இங்கு டப்ளினில் ஷா தனியாக ரொக்கம், நாள்வழி, பேரேடு, பற்று, வரவு, பாக்கி என்றெல்லாம் கணக்குகளை வகுப்பதும், கழிப்பதும், கூட்டுவதும், எண்ணுவதும், புத்தகங்களைப் புரட்டுவதும், இருப்புப் பெட்டியில் வைத்துப் பூட்டுவதுமாக இளமையைப் போக்கினர்.

"அந்தக் காலத்தில் ஆபீஸ்குமாஸ்தாக்கள் பெருமனக் கோட்டைகளைக் கட்டிக் கொண்டிருந்தார்களாம். ஒன்று, வேலைமேல் ஒரே வெறுப்பாய் உதறி எறிந்து விட்டு நாடகாசிரியன், நாவலாசிரியன், புலவன், தளபதி, பிரதம மந்திரி, பெருநடிகன் அதாவது ஷேக்ஸ்பியர், நெப்போலியன் என்ற வரிசையில்—ஏதாவது ஒருதுறையில்உயர்ந்து விளங்க வேண்டும் (இந்த வரிசையில்தான் நானிருந்தேன். என்னைப் போல எத்தனைப்பேர் இதிலிருக்கிறார்கள் ?) அல்லது வியாபாரத்தில் நோக்கமுடையவரானல், தன் சொந்தமாகக் கடைதொடங்கவோ, முதலாளியோடு பங்காளியாகவோ வேண்டும்....இந்தக் காலம் எல்லாம் மாறிவிட்டது. குமாஸ்தாவாகத் தொடங்கினல் குமாஸ்தாவகத்தான் முடியவேண்டும். இன்று தனிமனித சுதந்தரமோ, வளர்ச்சிக்குரிய வாய்ப்போ கிடையாது. நான் இது தருணம் ஒரு குமாஸ்தாவாக நேரிட்டால், குமாஸ்தாக்கள் தேசிய சங்கத்தில் அங்கத்தினனகி யிருப்பேன்" என்று குமாதஸ்ாக்கள் தொழிற்சங்கத்

தைப் பற்றி எழுதப்பட்ட ஒரு நூலின் முன்னுரையில் குறித்துள்ளார்.

"மனிதன் ஏற்படுத்திய பயனற்ற வேலைகளில் எல்லாம் குமாஸ்தா வேலையைப் போல் பயனற்ற வேலை நான் கண்டதில்லை" என்று கசந்து தன் ஆற்றலுக் கேற்ற புது வாழ்வின் கனவுகள் பல வற்றைக் கண்டு கொண்டிருக்கையில், ஒரு சிறு சம்பவம் நிகழ்ந்தது. தன்னோடு வேலை செய்து வந்த ஒருவர் பேச்சோடு பேச்சாக "ஒவ்வொரு இளைஞனும் தான் ஏதோ மேதாவியாகப் போவதாக நினைத்துக் கொள்ளுகிறான்" என்று சொன்னார். இது ஷாவைக் குத்திச் சொன்னதேயல்ல. ஆனால் ஷாவை அது சுருக்கென்று குத்தியது. இருபத்திநான்காவது வயதில் ஒருவர் தயவில்லாமல் வாழ்வதற்கு வழியாக இருந்த உத்தியோகத்தை விட்டு, கஷ்ட நிலையில் வாழும் தன் குடும்பத் தயவில் வாழ முடிவு செய்து, லண்டன் மாநகரை நோக்கிச் சென்றார். மூளையையும், மனஉறுதியையும் நம்பி வாழ்வைப்பந்தயம் வைத்தார். பந்தயம்வெற்றியாக முடிந்தது. தோல்வி ஏற்பட்டிருந்தாலோ இன்று அவர் இருந்த இடம் தெரியாமல் போயிருக்கும். "நான் எந்த ஏணியையும் பற்றிஏறவில்லை, வெறும் உழைப்பின் இழுப்புசக்தி ஒன்றாலேயே உயர்வடைந்தேன். என்னைஎல்லா இளைஞர்களும் பின்பற்ற முயன்று வீண் மோசம் போக வேண்டாம்" என்று எச்சரிக்கை செய்துள்ளார்.

குமாஸ்தா வேலையை வெறுத்துப் பேசினரே யாயினும் அந்த வேலை செய்ததன் பயனுக இரண்டு அருங்குணங்கள் அவருக்குத்துணையாய் அமைந்தன. ஒன்று, திருந்திய கையெழுத்து. வடிவு திருந்திய கையெழுத்து எவ்வளவு முக்கியமென்று காந்தி அடிகள் வற்புறுத்தியிருக்கிறார். மற்ருென்று, ஒழுங்கான உழைப்பு. இவ்விரண்டும் துணைசெய்ய, நாவலாசிரியராக முயன்ருர். பத்து நவீனங்களுக்கு மேல் எழுதினர். எல்லாம் படுதோல்வி; பெரும் புகழ் ஓங்கிய பிற்காலத்தே இவற்றுள் பல வெளியிடப்படலாயின. குத்துச்சண்டையில் விருப்புடையார். தாமே பழகிக்கொண்டவர். குத்துச் சண்டைகளை விரித்துப் பத்திரிகைகளுக்கு எழுதினர். சில பத்திரிகை ஆசிரியர்களுக்குப்பின் இருந்து "நிழல்" ஆசிரியராகவும் எழுதி, அவர்கள் கொடுத்த ஊதியத்தை மட்டும் பெற்று, தன் பெயர் வரமுடியாத வகையிலும் உழைத்து வந்தார். பணநெருக்கடி மிகுந்த நாட்கள்; பிச்சைக்காரர்கள் காசு கேட்டால் வெறும் பையை எடுத்து விரித்த நாட்கள்.

குத்துச்சண்டைக்கும் அழகுக் கலைகளுக்கும் வெகுதூரம். குத்துச்சண்டை விமர்சனத்திலிருந்து ஓவியம், இசை, சிற்பம், இலக்கியம் போன்ற துறைகளில் விமர்சனம் செய்ய முற்பட்டார். பல சங்கங்களிற் கலந்து சொற்பொழிவாற்றும் திறனைவளர்த்துக் கொண்டார். திக்குவாய் கொண்ட கிரேக்கப் பெருநாவலன் டெமாஸ்தனிஸ் கூழாங்கற்களை வாயிலே அடக்கி, சொல்லொழுக்கைத் திருத்த

முயன்றது போன்றிருந்தது அவர் முயற்சியும். இறுதியில் வெற்றி அடைந்தார். மனித இரத்தச் சுவைகண்ட வேங்கைப்புலி மீண்டும் மனிதரையே தேடி ஊர்ப்புறம் வருவதுபோல், சொல்வன்மையில் தேர்ச்சி பெற்ற ஷாவும் பொதுக் கூட்டங்களைநாடி அலைந்தார். மேடையிலேறிப் பேச வாய்ப்புக் கிட்டாவிட்டால், கேள்விகள் கேட்டாவது தன்னை அறிவித்துக் கொண்டுவந்தார். கேள்விகள் மிகக் கிண்டலானதாகவும், சபையோர் கொல்லென்று சிரிக்கும் விதமாகவும், தலைவருக்குத் தக்க மறுமொழி கூறமுடியாத வகையாகவும் அமைந்திருக்கும்.

இந்த நாட்களில் தான் அவர் பல நண்பர்களைக் கொண்டது. பெசண்ட் அம்மையார், பிராட்லா, வில்லியம் மாரிஸ், சிட்னி வெப், எச். ஜி. வெல்ஸ், கிரகாம் வாலஸ், ஸிட்னி அலிவியர் போன்று பிற்காலத்துப் புகழ்படைத்த பல எழுத்தாளர், சொற்பொழிவாளரோடு தோளோடு தோள் உராயப் பழகினர். இவர்கள் எல்லோருக்கும் பொதுவான இலட்சியம் ஒன்றிருந்தது-சோஷலிசம். ஒன்றுகூடி, பேபியன் சங்கம் என்று ஒரு சங்கம் கண்டு, அதில் முதலாளித்துவத்தின் கேடுகளையும், சோஷலிசத்தின் தனிஉயர்வுகளையும் சர்ச்சை செய்தும், துண்டு வெளியீடுகளை வழங்கியும் தீவிரப் பிரசாரம் செய்து வந்தனர். பெர்னட்ஷா அதில் சிறப்பான பங்கெடுத்து வந்தார். இரண்டுமுறை சிறைசெல்லும் நிலைமையும் வந்தது. படித்த இந்தக் கூட்டத்தின்

புரட்சிக்குரலை மதித்து நடப்பது குறைவென்று போலீசார் கருதி மேல்நடவடிக்கை எடுக்கவில்லை போலும். ஐந்தாண்டுகள் கார்ல்மார்க்ஸ் எழுதின “முதல்” என்ற நூலைத் துருவித் துருவிப்படித்தார். ஷா வின் தலைமயிரும் தாடியும் செந்நிறத்ததாயிருக்கவே “செங்கொடியை முகத்தில் கட்டிக் கொண்டு வரும் இளைஞர்” என்று அவரைச்சுட்டி ஸிட்னி வெப் வேடிக்கையாகப் பேசுவார். இங்ஙனமாக 1885-ம் ஆண்டுவரை பத்தாண்டுகள் சென்றன. இந்தப் பத்தாண்டுகளில் அவர் பேனைத்திறனால் பெற்ற சம்பாத்திய மெல்லாம் ஆறு பவுனே.

பெர்னார்ட் ஷாவுக்கு முதல் ஓட்டத்தில் ஏற்பட்ட தோல்விக்குப் பல காரணங்களுண்டு. கருத்துகளை எடுத்துரைப்பதில் பெருந்தைரியம் கொண்டவரா யிருந்தும், தன் சொந்த வாழ்க்கை முன்னேற்றத்துக்கு வகைசெய்யும் வழிகளில் பெரு அச்சமும் கூச்சமும் படைத்தவராக இருந்தார். இந்திரர் அமிழ்தம் இயைவதாயினும் இரப்பது இழுக்கென்று கருதினார். நண்பர்களையோ மற்றவர்களையோ தனக்குவேலை வேண்டுமென்றும் பொருள் வேண்டுமென்றும் கேட்பது தன்மானத்துக்குக் குறைவென்று எண்ணினார். தன் ஆற்றலைத் தன் நண்பர்கள் உணர்ந்து வேண்டியன செய்ய வேண்டுமென்று எதிர்பார்த்தார். பொருளைத் தேடிப் போவது புன்மை என்று புறக்கணித்தார்.

“நான் பொருளைத்தேடிப் போகவில்லை எனவே பொருள் என்னைத்தேடி வந்தது” என்

றெழுதுகிறார். நாளடைவில் நண்பர்களும் மேதை யைத் தெரிந்து பலதுறைகளில் பணிசெய்யுமாறு வேண்டிக் கொண்டனர். ஒரல்ட் (உலகம்) ஸ்டார் (நட்சத்திரம்) போன்ற பத்திரிகைகளுக்கு உதவி ஆசிரியராகவும் கலைவிமர்சகராகவும் வேலை செய் யும் வாய்ப்பு வந்தது. வில்லியம் ஆர்சர் என்ற எழுத் தாளர் உதவியால் பல பத்திரிகைகளின் அறிமுகம் ஏற்பட, வருவாயும் வருவதாயிற்று.

நாவலாசிரியரென்றும், நாடக ஆசிரியரென் றும் இலக்கிய மதிப்பாளரென்றும், அரசியல் அறி ஞரென்றும், சமூகப்புரட்சியாளரென்றும், தத் துவ ஞானியென்றும், தொழிலாளர் சிந்தனைத் தலை வரென்றும், உரிமைப்போரின் அறிவுத்தளபதி யென்றும், ஒவ்வொரு துறையும் அவரைத் தனக்கே உரியவரென்றும் பாராட்டியது; வரவேற்றது; உரிமை கொண்டாடியது. ஆனால் அவரோ, ஆதியி லும் அந்தத்திலும் தன்னைப் பத்திரிகைத் தொழி லாளியென்றே சொல்லிவந்தார். வாரந்தோ றும் நாடகம், ஓவியம், இசை, இலக்கியம் ஆகிய கலைத்துறைகளை ஆராய்ந்து இரண்டாயிரம் சொல் லளவு கொண்ட கட்டுரையை எழுதுவது; எல்லோ ரும் விருப்புற்றுக்களித்து உணருமாறு எடுத்துரைப் பது; சொல்வதை வேகத்தோடும், தெளிவோடும் சொல்வது; இலக்கிய வளப்பம் தோன்றப் புனைவது; அரிய கருத்துக்களையும், நீதிகளையும், புதுவதாய்ப் போதிப்பது; சிந்தனையைத் தூண்டும் வகையில் வச

ளிப்பது—என்றிவ்வாறு இவர்கட்டுரைகள் எழுதியதை என்னும்போது, பவணந்தி முனிவர் சொன்ன,

சுருங்கச் சொல்லல் விளங்கவைத்தல்
நவின்றோர்க்கினிமை நன்மொழி புணர்த்தல்
ஓசையுடைமை ஆழமுடைத்தாதல்
முறையின் வைப்பே உலக மலையாமை
விழுமியது பயத்தல் விளங்கு தாரணத்
தாகுதல் நூலிற் கழகெனும்பத்தே.

என்ற சூத்திரம் பயின்றவர் போன்று தோன்றுகிறது.

ஆயினும் பவணந்தியாரைப் பயின்றவரல்ல; பயின்றவராயினும் முற்றும் மேற்கொள்ள முற்பட்டவரல்ல; உலகம் மலையாது எழுதுவது நூலழகுள் ஒன்று என்கிறார், தமிழ் இலக்கண முனிவர். ஆங்கில இலக்கிய முனிவரோ உலகம் மலைப்ப எழுதுவதே அழகு, அல்லது அழகாயினும் அல்லதாயினும் ஆகுக, தன் கடமை-என்பதை அடிப்படையாகக் கொண்டவர்.

இது தான் அவர் வாழ்வு வெற்றியின் இரகசியம். இதுதான் அவர் வாழ்வுநாளிலயே எந்தப் புலவரும் எய்தாத புகழையும் கீர்த்தியையும் எய்திய தன் சூட்சுமம். இதை ஒரு சொல்லிலே சொல்ல வேண்டுமானல் 'புரட்சி' என்று சொல்லலாம். இதைக் கேட்க, காண அச்சம்கொள்கிறவர்கள், 'முற்போக்கு' என்றும் 'சீர்த்திருத்தம்' என்றும், இசைவுடை

ய சொற்களை வைத்துக் கொள்ளலாம். எல்லாவற்றிற்கும் நடுக்கருத்தாய் இருப்பது உலகம் மலைக்கச் சொல்வது என்பதேயாகும். அதுவே சிந்தனையைக் கிளறுவது. அதிர் வேட்டுப் போல் நெடுந்துயிலைக் கலைக்கவல்லது. உலகப் பெரியோர்கள், ஞானிகள், தீர்க்கதரிசிகள் எனப்படுவோரெல்லாம் இந்த முறையையே வெவ்வேறளவுக்குக் கையாண்டிருக்கின்றனர் என்று சொல்ல வேண்டும். "விரியன் பாம்புக் குட்டிகளே" என்று ஏசுநாதர் சொன்னபோது அவரைக் கேட்ட திரளான யூதமக்கள் எவ்வளவு திடுக்கிட்டாரோ, அவ்வளவு இன்று நாமும் பைபிளைப் படிக்கும்போது திடுக்கிடுகிறோம். "பரந்துகெடுக உலகியற்றியான்" "மேலுலகம் இல்லெனினும் ஈதலே நன்று" என்று வள்ளுவர் சொல்லும்போது உலகம் மலையாதிருக்கவா சொன்னார்? "கருணையிலா ஆட்சி கடுகி ஒழிக" என்று வள்ளலார் சொன்ன போது எத்தனை கண்டிப்பு, அழுத்தம்.

ஆயினும் இம்முறையில் எடுத்துச் சொல்வதிலே அறிவுவிளக்குத் தூண்டப்பட வேண்டுமேயன்றி, பகை எரி மூளலாகாது என்பதை அனைத்துயிர் மாட்டும் கனிவுகொண்ட ஷாவின் உள்ளம் கூறியது. உலகம் மலைக்கும் உண்மைகளை நவின்றோர்க் கினிமையோடும் எவ்வாறு உரைப்பது என்பதே அவர் பிரச்னையாயிற்று. இதற்காக ஒரு புது முறையைக் கையாண்டார். விரிசடைக் கடவுள் திரிபுர மெரித்த போது, நகை செய்து எரித்தாராம். அந்த நகையில் காழ்ப்பில்லை; பகைமையில்லை. நன்மையை நாடித்

தீமையை அழிக்கும் நோக்கம் ஒன்றே தான், எனவே, தான்சொல்லும் மிகப் புரட்சிகரமான கருத்துக்களையும், உலகம் நகைத்துச் சுவைக்குமாறு சொல்வதே முறையென்று கொண்டார். இந்தப் புது எழுத்துமுறையை மிக முயன்று வளர்த்தார். தம்மையே நையாண்டி செய்வதாகவே இருக்குமென்று தெரிந்தும் ஷா என்ன சொல்வார் என்று மக்கள் ஆவலாய் எதிர்பார்க்கும் முறையில் வாசகங்களைப் படைக்கலானார். அறிக்கை வந்ததும் கொல்லென்று சிரித்தார்கள்; சிரித்ததெல்லாம் தம் குறையையும், தம் குற்றத்தையும் பற்றியே தான். ஆனால் எந்த அளவுக்குப் பொது மக்கள் அதன் முழுப்பொருளையும் உணர்ந்தாரோ? சிரித்த சிரிப்பில், பொருளை விட்டு நிழலைத்தான் நினைத்தாரோ? சிலரையாயினும் பெருஞ்சிந்தனை செய்யுமாறு கிளறியுள்ளதென்பதற்கு ஐயமில்லை.

இதனாலேயே நாடகஅரங்கைத் தேவகோயிலுக்கும் மேலானதென்றார்; தேவகோயிலிலே அறவுரைகளை எடுத்தோதுகிறார்கள். ஆனால் மக்கள் அடங்கி, ஒடுங்கி, வாய்புதைத்து அச்சத்தோடு அமைந்திருக்கவேண் டியிருக்கிறது. அச்சம் கலந்த அறவுரை மக்களை நிலையான நெறிப்படுத்த வல்லதல்ல. வாழ்வோடு வாழ்வாய் விரவி, சிரிப்போடு சிரிப்பாய்ச்சிரித்து, வெல்லத்தில் கடுமருந்து பொதிந்தளிக்க வல்லது நாடகமேடைதான், வெறும்பொழுது போக்குக்கும், புலனின்பநுகர்ச்சிக்கும் விருந்தளிப்பது கலையாகாது. அறவுரைகளைப் புகட்டுவதே

கலையின் ஆதியும் அந்தமும். இந்த இலட்சியத்தில் இளங்கோ அடிகள் போன்ற நம் செந்தமிழ் ஆசிரியர்கள் மரபில் வந்தவர் பெர்னுட்ஷா. கிரேக்க நாடக ஆசிரியர்களான ஈஸ்கிலிஸ், சாபோகிலிஸ் போன்றவர் முறையைப் புதுக்கவந்த புதுக் கலைஞன். இதனாலேயே ஷேக்ஸ்பியரை மிக மட்டமான நாடகாசிரியரென்று மதிப்பிட்டார். புரட்சிக் கருத்துக்களைப் புகட்ட வந்த இப்சனை இணையற்ற நாடகாசிரியரென்று விளம்பரஞ்செய்தார், வாதாடினார். தன்னிலும் குறைந்தவர் ஷேக்ஸ்பியர் என்ற அளவுக்குக்கூட எழுதினார்.

ஆங்கில இலக்கியத்தின் கண் போன்று மக்கள் பாராட்டிவந்த ஷேக்ஸ்பியரை இவ்வாறு குறைபட மதிப்பிட்டது பெரும் பரபரப்பையும் எதிர்க் கிளர்ச்சியையும் எழுப்பியது. ஷேக்ஸபியர் நாடகங்களில் கற்பனையிலோ, கதைப் புனைவிலோ முதற் கருத்துக்களில்லை ; சிந்தனையிலே ஆழமில்லை; கருத்துக்கள் மிகச் சாதாரணம் பெண்களை அடிமைகளாகக் காட்டுவது, மாய்ந்தொழிந்த நிலப் பிரபுத்துவத்தை விதந்தோதுவது போன்ற பிற் போக்கான பல கருத்துக்கள் மலிந்து கிடப்பது எனக் காட்டி மறுத்தார். இவை அனைத்தையும் உலகு ஏற்றுக் கொண்டதாகத் தெரியவில்லை ; புரட்சிகரமான, நிலையான அறவுரைகளை விளக்க வந்த இப்சனை மக்கள் எள்ளினார்களே என்று ஷா இவ்வாறு கூறி யிருக்கலாம். அல்லது, அழியாத நீதிகளை உலகுக் கெடுத்தோதுவதே இலக்கியப்

பயன்என்ற குன்றேறி நின்று கொண்ட கொள்கையாயிருக்கலாம். இராமகதை ஆரியகதை என்று சொல்லிக் கம்பனைப் புறக்கணிக்க வேண்டும் என்று சொல்வது போலிருக்கிறது. கம்பனிலும் ஷேக்ஸ்பியரிலும் வற்றாத இன்ப ஊற்றுக்கள் இருக்கின்றன. ஊழி உள்ளளவும், பெர்னட்ஷாவின் ஐம்பதுக்கு மேலான அறநெறி விளக்கும் நாடகங்களை மறந்த பிறகும் மக்கள் கம்பனையும் ஷேக்ஸ்பியரையும் படித்துப் படித்து சுவைத்துச் சுவைத்து மகிழ்ந்து மகிழ்ந்து வாழ்வார்கள்.

தான் என்ற முனைப்போடு பேசுவதில் பெர்னட் ஷாவுக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லையென்றே கூறவேண்டும். இதுவும் தன் எழுத்து வேகத்துக்கு அவர் மேற்கொண்ட ஒரு இலக்கியத் தந்திரமேயன்றி வேறல்ல. 'பெர்னட்ஷா சொல்கிறன்; வேறென்ன வேண்டும்' என்பார். உலகத்தில் ஒரு பெர்னட்ஷாதானிருக்க முடியும் என்பார்; பல நூறுண்டுகளுக்கு ஒருஷா தான் பிறக்க முடியுமென்பார். இவையெல்லாம் உயர்ந்த தன் இலட்சியம் நிறைவேற மேற்கொண்ட நடிப்பு; ஒரு போர்வை. எப்படியும் மக்கள் தன் உரைகளைச் செவிமடுத்து உய்யவேண்டுமென்ற பெருவிருப்பு. உண்மையில் தன்னடக்கம் கொண்டவர். தன்குறைபாடுகளை நன்குணர்ந்தவர். திருவள்ளுவரும் திருவாழ்த்தானும் திரண்டு திருஅவதாரம் செய்தது போல்பவர். இரண்டு மனிதரென்றே அவரைச் சொல்ல வேண்டும். அடக்கத்தோடு சிந்தனை செய்யும் ஒரு

பெர்னுட்ஷா, திடுக்கடைய 'நான்' என்று முன்வந்து அறிவு புகட்டும் ஒரு பெர்னுட்ஷா. இந்த இரட்டை வாழ்க்கையை நாமும் பின்பற்ற முடியுமென்று கனவு கண்டு விட்டோமானல் பேராபத்து.

பெர்னுட்ஷா பெரிய 'சைவர்' தான் சைவ உணவு மேற்கொள்வதற்குச் சைக்கிள் பயிற்சியே காரணமென்கிருர். பத்தொன்பதாம் நூற்ருண்டில் சைக்கிள் வண்டி வந்த புதிதில் சைவ உணவு அருந்துகிறவர்களே நெடுநேரம் சைக்கிள் விடமுடியுமென்ற ஒரு நம்பிக்கை ஆங்கில நாட்டில் பிறந்தது. இதனல் சாலையோரங்களி லெல்லாம் சைக்கிள் வாடகைக்கடைகளும், பழுது பார்க்கும் கடைகளும் அவற்றை அடுத்துச் சைவ உணவு விடுதிகளும் பல எழலாயின. ஷா சைக்கிள் விடுவதில் பெரு விருப்புள்ளவர். தனக்கு வேண்டிய உடலுழைப்பை யெல்லாம் சைக்கிள் சவாரி செய்தே நெடுநாள் வரைபெற்று வந்தார்.

ஆனல் சைக்கிள் என்றது ஒரு போலிச் சாக்கு. உண்மையில் அவர்சைவ உணவைக் கொண்டதற்கு வள்ளுவர் முதல் வள்ளலார், காந்தியடிகள் வரை என்ன கூறினர்களோ அதுவேதான். புலாலுணவு ஆத்மீக வளர்ச்சிக்கு ஊறு செய்வதாயிருக்கிறது என்பதே.

> **தன்னூன் பெருக்கற்குத்தான் பிறிதூனுண்பான்**
> **எங்ஙனம் ஆளும் அருள் ?**

என்று வள்ளுவர்போல் வினவியவர் ஷா. "கொல்லாமை எத்தனைக்குணக் கேட்டை நீக்கும்"

என்று தாயுமானவர்போல் சிந்தித்தவர். புரட்சிக் கவிஞரான ஷெல்லியை இம்முறையில் பின்பற்றியவர்.

ஷாவின் சைவ உணவு பற்றிச் சுவை மிகுந்த கதைகள் பல உண்டு. மரக்கறி உணவில் சத்தில்லை என்று சொன்ன ஒரு மருத்துவரிடம் "ஒரு சிறு ஆலம் விதையைப் பூமிக்குள்ளே புதைத்து வையுங்கள். அது பரந்த தண்ணிழலைக் கொடுக்கும் பெருமரமாக வளர்கின்றது. ஒரு செத்த ஆட்டைப் புதைத்து வையுங்கள். அது என்னவாகிறது?" என்று கேட்டாராம். மற்றொரு முறை, மிகுந்த நோய்வாய்ப் பட்டிருக்கையில் மருத்துவர் வந்து மாமிச உணவு கொள்ளவேண்டுமென்று கூறினாராம். உறவினரும் வற்புறுத்தினராம். அப்பொழுது ஷா சொல்லுவார்: "உயிரைக் கொன்று தின்பதினும் உயிர் வாழாமை நன்று. இன்று என்னுடைய இறுதிக்கடன்களை எப்படிச் செய்யவேண்டுமென்று என் உயிலில் எழுதிவைத்துவிட்டேன். இடுகாட்டுக்குப்போகும் போது என் பிணப்பெட்டியைத் தொடர்ந்து வருவது பெரிய கோச்வண்டிகளும் மேள தாளங்களுமல்ல. மந்தை மந்தையான மாடுகள், ஆடுகள், பன்றிகள், கூட்டம் கூட்டமான கோழிகள், பறவைகள்; ஒரு காட்சிச் சாலை நிறையுமளவான உயிருள்ள மீன்கள்--இவையே என் உடலத்தைப் பின் தொடர்ந்துவரும். 'மன்னுயிரைப் புசிப்பதினும் தன்னுயிரைத் துறத்தலே மேலென்ற ஒரு மனிதன் செல்கிறா'னென்று என்

ஞாபகமாக வெள்ளைத்துணிகளை அணிந்துகொண்டு பின் தொடரும். நோவாவின் பேழைக்குப்பிறகு, இவ்வளவு அற்புதமான ஒரு ஊர்வலத்தை எவருமே கண்டறியாத முறையிலிருக்கும்." அன்பின் வரம்பு.

புலான் மறுத்தலில் மட்டுமல்ல, மற்றும் கள்ளுண்ணுமை போன்ற பழக்கங்களிலும் ஷா, வள்ளுவர், காந்தியடிகள் போன்ற உலகப்பெரியார் நெறியை மேற்கொண்டொழுகியவர். 'சிந்தனை மதுவுண்டு செம்மாந்து நிற்போருக்குத் திராட்சை மது ஏதுக்கடீ' என்பது போன்றிருந்தது அவர் ஒழுக்கம். வள்ளுவர் காலத்தில் புகையிலை, காஃபி, தேநீர் முதலியன வரவில்லை. எனவே அவற்றைப் பற்றிக் கூறாது விடுத்தார். ஷாவும், காந்தியடிகளும் இவற்றை யெல்லாம் ஒதுக்கினர். அறிவா லெழும் எழுச்சியே மெய்யான எழுச்சி; நரம்பும் தசையும் மீதூர எழும் புலனெழுச்சி பொய் யெழுச்சி, அறிவை மயக்கும் எழுச்சி என்று கருதினர். பொது இடங்களில் புகைப்பிடிப்பதை வன்மையாகக் கண்டித்தார்.

கார்ல் மார்க்சைக் கசடறக் கற்றவரேயானுலும் கடவுள் நம்பிக்கை அற்றவரல்ல ; உலகாயத வெறி பிடித்தவருமல்ல. எல்லோரும் இன்புற்றிருப்பதே உறுதியான ஆத்மீகநெறி, எல்லோரும் இன்புற்றி ருப்பதே பொது உடைமையின் குறிக்கோளும். பொருளாதாரவொற்றுமையைக் காட்டிச் சமூக மும் சமயமும் ஏற்றத்தாழ்வுகளைக் கற்பிக்க முன்

வந்ததால் வள்ளலார் போல் "மதம் என்னும் பேய் பிடியாதிருத்தல் வேண்டும்" என்ற மனப்பான்மை கொண்டவரானர். அரம்பையர் ஆடும், நித்திய கல்யாண மேலுலகத்தைவிட, எரியும் அழுகையும் நிறைந்த கீழுலகம் மேலெ" ன்பார். "நித்தியமும் கல்யாணமாக இருந்தால் அதில் சுவையேது? விரைவில் சப்பென்று போய்விடுமே; விதம் வித மாயிருக்கும் நரகத்தில் வேடிக்கையாவது இருக் கும்" என்பார். உண்மையில் இவற்றிலெல்லாம் நம்பிக்கையற்றவர். ஏசுவைத் தெய்வபுத்திர னென்று கருதினரில்லை, சீரிய தீர்க்க தரிசிகளில் உயர்ந்த ஒரு பெரியவர் என்றே கண்டார்; கிறிஸ் துவின் போதனைகள் பிற்கால மக்கள் வாழ்க்கை யில் செயலாக மிளிரவில்லையே என்று வருந்தினர்; முதலாளித்துவத்துக்குத் தோள் கொடுக்கும் முறை யிலேயே இன்றையக் கிறிஸ்துவம் உள்ளது என்று நொந்தார். தொழுகையில் நம்பிக்கை யற்றவர்.

ஆனல் அருவமான ஒரு கடவுள் உண்டென்றார். அதை ஜீவசக்தி என்றார். அந்த ஜீவசக்தியிலிரு ந்து உயிர்களெல்லாம் தோற்றுவனவென்றார்: டார்வின் கொள்கையைத் திருத்திப் பெர்க்சன் தத் துவத்தை விரவி ஒரு புது உயிர்த் தத்துவத்தை வகுத்தார். டார்வினுடைய ஏற்பாட்டிலே, மனம் என்பதொன்றில்லை. ஆத்மீகம் என்பதொன்றில் லை. அறிவு என்பதொன்றில்லை. எல்லாம் தானய் இயங்குகின்றது. இது ஷாவுக்கு ஏற்புடையதாக

இல்லை. "ஜீவசக்தி அறிவுடையது; ஆத்மீகமானது; இயங்குவது; இயக்குவது" என்றெல்லாம் நாட்டினார். இவர் கோட்பாட்டை என்னால் தெளிவுற விளக்க முடியவில்லை. ஷாவுக்கே தெளிவுண்டோ என்பது ஐயப்பாடு. அவர் சீடரும் பிரபல தத்துவ ஆசிரியருமான ஸி. இ. எம். ஜோட் என்பவர் அவரைப் பற்றி அண்மையில் எழுதிய நூலில் "விரிவுகாண்க" என்று சொல்லித் தப்பித்துக் கொள்கிறேன்.

சமூகத்துறையிலே புது மனித வருக்கத்தைப் படைக்க வேண்டுமென்றார். இல்லாவிட்டால் எத்தனையோ உயிர் வருக்கங்கள் உலகிலே இல்லாது அழிந்து விட்டபடி மனிதனும் அழிந்து விடுவானென்று அச்சுறுத்தினார். இந்தப் புது மனிதர்கள் மாமனிதர்களாக விளங்க வேண்டும். உடல் நலனும் உளநலனும் மதிநலனும் ஒருங்கே அமைந்தவராயிருக்க வேண்டும். அதற்கேற்ற முறையில் ஆண், பெண் முயக்கத்தைச் சமூகம் வகுக்க வேண்டும். இவையெல்லாம் மிகப்புரட்சிகரமாயிருந்தன. கேள்வியுற்ற ஒரு பிரபலநட்சத்திரம்-கட்டழகி ஷாவிடம் நெருங்கி, "நீரும் நானும் புணர்ந்து ஒரு மகவைப் பெறுவோமே. உம்முடைய அறிவும் என்னுடைய அழகும் பெற்றுப் பொலியுமே" என்றழைத்தாளாம்; ஷா, அதற்கு "நல்ல யோசனை தான். ஆனால் என்னுடைய அழகும் உன்னுடைய அறிவும் கொண்டதாகப் பிறந்துவிட்டாலோ!" என்று பதிலளித்தாராம்.

பொருளாதாரத் துறையில் கார்ல் மார்க்ஸைப்

பின்பற்றினரே ஆயினும் இங்கிலாந்தைப் பொறுத்தவரையில் புரட்சியை விரும்பவில்லை. ஜனநாயக முறையிலேயே சோஷலிசத்தை உருவாக்க முடியுமென்று கருதினர். முதன் முதலில் நகராண்மைக் கழகங்களிலுள்ள, தண்ணீர் சப்ளை, மின்சார சப்ளை முதலியவற்றைத் தேசீயமாக்கி, பிறகு படிப்படியாக எல்லாத் தொழில்களையும் தேசீயமாக்க வெண்டுமென்றார்; இதற்காக லண்டன் நகர சபையில் ஆறாண்டு வேலையும் பார்த்தார்.

அரசியல் துறையிலே, அரசாட்சி செய்வோர், அதிகாரத்தை மிகப் பெருந்தன்மையோடு ஓச்ச வேண்டுமென்றார்.

> செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்
> கவிகைக்கீழ் தங்குமுலகு.

என்பதே இலட்சிய அரசின் அடிப்படையாக இருக்கவேண்டுமென்று கருதி, ஷேக்ஸ்பியர் சித்திரித்த சீசரை விடுத்து மற்றொரு இலட்சிய சீசரைச் சிருஷ்டித்தார்.

உயிர்களை வதைத்து அறுத்துப் பார்த்து விஞ்ஞான ஆராய்ச்சி செய்வது மகாக்கொடுமை என்றார். அம்மை குத்துவது அருவருக்கத்தக்கது, அறிவற்றதுமென்றார். விஞ்ஞானிகள் என்போர் பல துறைகளிலும் மேற்கொள்ளும் விஞ்ஞான மூடப்பழக்கங்களைப் பற்றி விளக்கினர்.

இங்ஙனமாக நாடகம், காவியம், ஓவியம், சிற்பம், சங்கீதம், விஞ்ஞானம், தத்துவம், சரித்திரம்

பொருளாதாரம், சமூக சரித்திரம், என அவர் அறிவுச் செக்கில் ஆடாத கலைகளில்லை. எல்லாவற்றையும் பிழிந்து, தன் மாயச்சுயச்சரக்கையும் சேர்த்துத்தேன்கலந்த ஒரு அருமருந்தாக அரை நூற்றாண்டுகளுக்கு மேல் உலகுக்கு அள்ளி வழங்கிவந்தார். பலர் அவரை மூளைக்கோளாறு பிடித்தவரென்று கூறியதுமுண்டு. அவரையே கேட்டபோது மறுக்க முற்படவில்லை. ஒருக்காலிருக்கலாம் யார் கண்டது?

"பலர் நான் மனிதவர்க்கத்தை வெறுப்பதாகச் சொல்கிறார்கள். வெறுப்பு என்பதல்ல சரியான சொல். அச்சம் என்று சொல்லவேண்டும். சிங்கத்தை அடக்கி ஆட்டுகிறவன் தைரியத்தைக் கூட நான் பெரிதாக மதித்ததில்லை. கூட்டுக்குள் அவன் போகும்பொழுது மனிதர்கள் பயமில்லாதேனும் இருக்கலாம். சிங்கத்தினிடை அஞ்சவேண்டியதென்ன இருக்கிறது? அதற்கு இலட்சியமுண்டா, மதம் உண்டா, அரசியல் கொடுமை உண்டா, தயவு உண்டா? அதாவது தான் தின்னவேண்டியது என்ற ஒன்றைத்தவிர வேறுஎக்காரணம் கொண்டும் உயிர்களைக் கொல்லவேண்டும் என்ற எண்ணம் அதற்கில்லையே. சென்ற யுத்தத்தில் அமெரிக்கர்கள் ஸ்பெயின் தேசத்தாரின் கப்பலுக்குத் தீ வைத்து விட்டுக் காயம் பட்டவர்களை உலையிலிருந்து எடுப்பது போல் வெளியே எடுத்தார்கள். இதன் பயன், அமெரிக்க தளகர்த்தர் ஒருவர் தனது படைஞரை யெல்லாம்

ஒன்று கூட்டி, கடவுள் ஒருவர் உண்டென்று தான் நம்புவதாகப் பிரசங்கம் செய்தார், ஒரு சிங்கம் அப்படிச் செய்திருக்க முடியுமா? இதை யெல்லாம் படித்துவிட்டு, பொது மக்கள் கருத்தை இடிபோல் காட்டுவதாகச் சொல்லும் பத்திரிகைகள் இந்தச் சம்பவத்தை இயல்பானதாகவும், தெய்வ பக்திக்கு எடுத்துக் காட்டாகவும் இருப்பதாக எழுதின. இதற்குப் பிறகு எனக்கு மூளைக் கோளாறுதானு என்ற சந்தேகம் எனக்கே உண் டாயிற்று. ஒன்றில் நான் பித்தனுக இருக்க வேண்டும்; அல்லது உலகம் பித்தாக இருக்க வேண்டும்" என்று பதிலிறுத்தார்.

ஆங்கில நாட்டில் பிறந்தது அவருக்கும் நமக்கும் இருந்த நல்வினையே. கிரேக்க நாட்டில் இவரைப் போல் இரண்டாயிரத்தைந்நூறு ஆண்டுகளுக்கு முன் பேசிக்கொண்டிருந்த ஒருவரை விஷம் கொடுத்துக் கொன்றூர்கள். இந்தியாவில் இன்று பேசிக் கொண்டிருந்த ஒருவரைத் துப்பாக்கியால் சுட்டுக் கொன்றூர்கள்.

என் வாழ்வு அறிவுமுகிழும் பருவத்திலே இரண்டு பெரியவர்கள் எழுத்து என் கருத்தை ஈர்த்தது. அவருள் ஒருவர் பொனுட் ஷா, மற்ற வர் தமிழர்.

நான் தூங்க விரும்புகிறேன். தூக்கம். தூக்கம் என்றார். பின் விழிக்கவில்லை பெர்னட்ஷா. யார் விழிக்க வேண்டுவது? அவரா, நாமா?

ஓதி வைத்த நூல்களும்
உணர்ந்து கற்ற கல்வியும்
மாது மக்கள் சுற்றமும்
மறக்க வந்த நித்திரை
ஏது புக்கொ ளித்ததோ
எங்கு மாகி நின்றதோ
சோதி புக்கொளித்த மாயஞ்
சொல்லடா சுவாமியே.

# மெஸ்மர்

பதினெட்டாம் நூற்றாண்டிலே பிரஞ்சுப் புரட்சி எழுவதற்கு ஒருசில ஆண்டுகளுக்கு முன்னே, பாரிஸ் மாநகரிலே, அரண்மனை போன்றதொரு மாளிகையிலே, அகன்ற ஒருநடு அறையிலே நமது கதை தொடங்குகிறது. வண்ணக் கண்ணாடிச் சாளரங்கள் மூடியவண்ண மிருக்கின்றன. கண்ணாடிகள் மீதே ஓவியர் எழுதிய எழிற் சித்திரங்களை விளக்கவருவன போன்று கதிரோன் ஒளிக்கிரணங்கள் மெல்ல ஊடுருவி நுழைகின்றன. நடமாடும் சந்தடி சற்றும் எழாதவாறு கனத்த பட்டுக்கம்பளம் தரையில் விரிக்கப்பட்டிருக்கிறது. மேலே அண்ணாந்து பார்க்க, நவக்கிரகங்களின் திருவுருவங்கள் தெரிகின்றன. நறுமணப் புகை அறையெங்கும் நிறைந்து கமழ்ந்து மனச்சாந்தியைப் பரப்புகின்றது. இன்னிசை வாச்சியங்கள் மெல்ல இசைத்துச் செவிக்கின்பம் ஊட்டுகின்றன. வெள்ளைக்கலையுடுத்த வனப்புமிகுந்த பணியாட்கள் மெல்ல உலாவி வருவோரைப் புன்முறுவல் தவழ வரவேற்கின்றனர்.

அரசர் கோயிலோ, ஆண்டவன் கோயிலோ என்னுமாறு தோன்றும் இந்தஅறை இரண்டுமல்ல. உடலையும் மனத்தையும் அல்லற்படுத்தும் நோயாளிகளுக்கு ஆறுதலளிக்கும் ஒரு மருத்துவர் புதுவகையில் அமைத்த அறை. ஒருவர் பின் ஒரு

வராக நோயாளிகள் வருகின்றனர். வந்து அறையின் நடுவே வைக்கப்பட்டிருக்கும் ஒரு மரத்தொட்டியை வளைந்து வரிசை பெற நிற்கின்றனர். தொட்டி மூடப்பட்டிருக்கிறது. உள்ளே நீர் நிரம்ப இருக்கிறது. தொட்டியின் நாலா பக்கங்களிலுமிருந்து கூரிய இரும்புக்கம்பிகள் வேல்போல் எழுந்து நிற்கின்றன. கோயிலின் பலிபீடம் போல் அது காட்சி அளிக்கின்றது. பூசாரியை மட்டும் இன்னும் காணோம். ஆயினும் நோய் கொண்ட அடியார்கள் தொட்டியைச் சுற்றிலும் அமர்ந்து கொண்டு, கம்பிகளில் ஒன்றை உருவி, தத்தம் உடற்புறத்தில் நோய்கொண்ட இடத்தில் வைத்துப் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். இப்படியாக அரைமணி நேரம்ஒரு மணி நேரம் அமைதியோடு உட்கார்ந்திருக்கிறார்கள்.

திடீரென்று மணியோசை கேட்கிறது. நோயாளிகள் மெல்ல எழுந்து ஒருவர் கையை ஒருவர் பிடித்துக் கொண்டு சங்கிலித்தொடர் போன்று அணி செய்து நிற்கின்றனர். இசைக் கருவிகள் எழுந்து முழங்குகின்றன. அறையின் கதவுகள் படீரென்று திறக்கப்படுகின்றன. முழங்காலளவு நீண்ட, குங்கும வண்ணப்பட்டங்கி அணிந்த ஒரு நெடிய உருவம் உள்ளே புகுகின்றது.

என்ன கம்பீரத் தோற்றம்! ஆண் இலக்கணங்கள் அனைத்தும் குறைவுபடாத வடிவு. கையிலே

ஒரு மந்திரக்கோல். அரசரும் பொறாமை கொள்ளும் ஏறுபோல் பீடு நடை, கண்களிலே என்ன ஒளி; அமானுஷ்ய ஆற்றல் ஒன்றை அது வீசியது. வடிகட்டிய நாஸ்திகரையும் அது வணங்கச் செய்வதாயிருந்தது.

வந்த உருவம் நோயாளிகள் திரளிலே சென்றது. சிலரை மந்திரக்கோலால் மெல்லத் தைவந்தது. சிலரை ஒளிவீசும் கண்களால் அருள் நோக்குப் போன்று பார்த்தது. சிலரைக் கையால் தடவியது. சிலர்மேல் எதோ கைக்காட்டுச் செய்தது. சிலர் காதில் எதோ முணுமுணுத்தது. இப்படியாகச் சற்றுப் பொழுது சென்றதும், நோயாளிகளிடம் ஒரு பெரிய மாறுதல் ஏற்பட்டது. ஒருவித நடுக்கம்; பின்னே உரத்த சிரிப்பு; நெட்டுயிர்ப்பு; ஆட்டம்; குதிப்பு; ஒருவரை ஒருவர் பிணைத்து இறுகத் தழுவல்: ஒரு சிலர் களைத்துக் கல் போன்று சமைந்து விடுதல்.

குங்குமஅங்கி அணிந்த உருவம் அவர்களைக் கம்பீரத்தோடு மெல்ல அணுகியது. சிலரிடம் சாந்தி என்றது. சிலரிடம் 'போய்விட்டது' என்றது. கட்டுக்கடங்காத சிலரை அடுத்த அறைக்குச் சந்தடியில்லாது எடுத்துச் செல்ல ஆணையிட்டது. இங்ஙனமாக முன்னிருந்த அமைதியை மீண்டும் அறை எய்தியது. ஒன்றிரண்டு தடவைகள் இந்த முறையில் பெற்ற சிகிச்சையால், வந்தவருட் பெரும்பாலானோர் கொண்ட பிணிகள் அகல நலம்பெற்றுத் திரும்பினர்.

யார் இந்தக்குங்கும அங்கி அணிந்த பூசாரி? எங்கிருந்து வந்தது இந்தக் கம்பீர நெடிய உருவம்? அவர் சிகிச்சை முறையின் இரகசியம் என்ன? மந்திரக் கோலின் மர்மம் யாது? தண்ணீர்த் தொட்டியுள் நட்ட இரும்பு வேல்களின் நுட்பம் என்ன? கண்ணொளி வீச்சின் உட்கருத்தென்ன? தடவிக் கொடுக்கும் ஆற்றலின் அருமை என்ன?

ஆஸ்திரியாவின் தலை நகரான வியன்னு அன்றும் இன்றும் மருத்துவக் கலைக்குப் புகழ்போனது. இந்த வியன்னுப் பட்டினத்தில் ஸ்விட்ஸர்லாந்து நாட்டைச் சேர்ந்தவரான ஒரு மருத்துவர் விளம்பரப் பலகையைத் தொங்கவிட்டுக்கொண்டு வாளாதார். நோயாளிகள் எவரும் அவரை இடந்தேடி திருந்வரக் காணேம். ஆனல் அவர் அதைப்பற்றிக் கவலை அடைந்ததாகவும் இல்லை. மனைவி பெருநிதியம் படைத்தவர். இருக்கிற சொத்தை வைத்துக்கொண்டு அன்பர்களுக்கெல்லாம் அடிக்கடி இன்பவிருந்துகள் அளித்துக் கொண்டு இசைக் கலையில் ஈடுபாடு கொண்டு முன்னையோர் எழுதிய நூற்களை நாளும் ஆராய்ந்து கொண்டு, ஒரு பெரிய கனவானின் நிரம்பிய வாழ்க்கையைச் செவ்வனே நடத்திக் கொண்டு வந்தார்.

ஆனல் ஆராய்ச்சி வீண் போவதில்லை. பழைய நூற்களில் காந்தக் கம்பிக்கிருக்கும் மருத்துவ ஆற்றலைப்பற்றிக் குறிக்கப்பட்டிருந்தது. இலை மறை காய்போல் கிடந்த அந்த உண்மையை இவர் சோ

தனே செய்து புதுக்க விழைந்தார். நோயுற்ற ஒரு வன் உறுப்பு மீதே காந்தக்கம்பி ஒன்றை மேலே நீட்டி முயன்றுபார்த்த சிகிச்சை முறையில், அவன் முற்றும் குணமடைந்தான். எடுத்ததுமே வெற்றி கண்ட மருத்துவர், யாவற்றிலுமே பின் தொடர்ந்து வெற்றி காணவே, அவர் புகழ் பெருவெள்ளம் போல் பாய்ந்து பரந்தது. அவர் புகழ் ஓங்க ஓங்க, ஏனைய மருத்துவர் கூட்டுப்பகையும் கோளும் பொங்கிப் பொங்கி மிகுவதாயின.

மெரியா தெரிசா என்னும் மங்கை நல்லாள் சங்கீத மேதை. வயது பதினெட்டு. ஆனல் நான்கு வயதிலேயே கண்ணிரண்டும் ஒளி மழுங்கிவிட்டன. அதே பேர்கொண்ட ஆஸ்திரிய அரசியார்க்கு மிகவும் பிரியமானவள். பியானோ என்னும் இசைக் கருவியில் கைதேர்ந்தவள். அவள் கச்சேரி என்ருல் திரளான மக்கள் கூடினர். அவள் கண்ணுக்கு எத்தனையோ மருத்துவர்கள் வைத்தியம் செய்து கைவிட்டு விட்டனர். இராணியாரின் அரண்மனைமருத்துவரே பத்தாண்டு முயன்று பார்த்தும் பயனில்லையென்று சோர்வடைந்து விட்டார். அப்படிப்பட்ட ஒரு குருட்டுக்கேசை நம் குங்கும அங்கி மருத்துவர் சிகிச்சை செய்ய ஒப்புக்கொண்டார். ஓரளவு அவர் புதுமுறையால் வெற்றி ஏற்படுவது போலவும் தோன்றிற்று. அவள் மீண்டும் மெல்ல மெல்லப் பார்வையைப் பெற்று வந்த விதத்தை அவள் தந்தை அன்ருடம் நாட் குறிப்பில் எழுதிவந்தார். அதைப் படிக்கப்படிக்க

ஏதோ புதுமைக்கதை போலவே இருக்கிறது. இளமையிற் கண்ணை இழந்த ஒருத்தி மீண்டும் அதைப் பெற நேரிட்டால், உலகப் பொருள்கள் அவளுக்கு எவ்வாறு தோற்றமளிக்கின்றன என்பதை அவள் வரலாறு விந்தைவகையில் விளக்குகின்றது. புது விழி பெற்று வருகிறவளுக்குத் தோட்டத்திலே உலாவுகையில் ரோஜாச் செடிகளெல்லாம் அவளோடே உடன் உலாவுதல் போன்றிருந்தனவாம். மிகச்சேய்மையிலே ஆற்றோரமிருக்கும் மரங்களெல்லாம் அடுத்து நெருங்கி நிற்பனபோல் தோன்றினவாம். வான வீதியின் தாரகைக் கூட்டங்கள் திரண்டு அவளை அமுக்குவன போலிருந்தனவாம். வீட்டின் விளக்கொளி அவளை நோக்கி விரைந்து வருவது போன்றிருந்ததாம். நிலக்கண்ணாடியின் எதிரே தன்னுருவம் வெவ்வேறு அளவாய், வடிவாய் மாறுவது தனக்கே வியப்பை அளித்ததுவாம். எதிர்ப்படுவோர் விழியும் வாயும் எப்படி எப்படியோ இருந்தனவாம், மூக்கோ சொல்லவேண்டியதில்லை; தன் கண்களைக் குத்தவரும் கூரிய ஈட்டிபோல் காட்சி அளித்தனவாம். கண்ணொளி பெற்றோர்க்கு முதன் முதலில் உலகு எவ்வாறெல்லாம் தோற்றமளிக்கின்றது!

ஒளியிழந்த, கண்ணினை ஒளி பெறச்செய்ததே மருத்துவர் பெரும் பிழையாக முடிந்தது. நோயாளிகள் எல்லோரும் அவரையே நாடிப்போகின்றனர். அவர் புகழைப் பேசாத நாவே வியன்ஞைப்பட்டினத்திலில்லை. அவரே மருத்துவர்; ஏனையோ

ரெல்லாம் வருத்துவரே என்று எங்கும் முழக்கமாகி யது; மற்றவர் பிழைப்பில் மண் விழுந்தது. யோசிக் கலானார்கள்; "யார் இவன்? எப்படிக் குணப் படுத்துகிறான்? யார் கண்டார்கள், அவன் காணும் குணம் நிலையாக இருக்குமென்று? ஏதோ நோயா ளிகள் தாங்கள் குணமடைந்ததாக எண்ணிக் கொள்கிறார்கள். அவ்வளவே; நாளை அந்த நம் பிக்கை போய்விட்டால், மீண்டும் நோய்வாய்ப்படு கிறார்கள். அந்தப் பியானோ வாசிக்கும் பெண்ணைப் பற்றிச் சொல்கிறார்கள். அது முன்ஏற்பாட்டின் பேரில் செய்த பெரியதொரு ஏமாற்றுவித்தையாக இருக்கலாம். அல்லது அவள் இயல்பாக நலமடைந் திருக்கலாம். ஒரு வேளை அவள் குருடாக எப்போ தும் இருந்ததே இல்லையோ? குணப்படுத்துகிற மருத்துவனானால் அதை எப்படிச் செய்கிறான் என்று நூலறிவழக்குக்கும் ஒப்ப எடுத்துக் காட்டு வானே? தண்ணீர்த் தொட்டிக்குள் செருகி வைத் திருக்கும் கம்பியைக் கையில் பிடிப்பதாம்; காந்தம் பாய்வதாம்; நோய் போவதாம். பெரும் ஏமாற்று வித்தை. அந்த ஏமாற்றினால்தான் இந்தப் பாமர மக்கள் மயங்கிக் கிடக்கிறார்கள். முட்டாள்கள்! எப்படியும் இவனைத் தொலைத்துவிட்டுத்தான் மறு வேலை பார்ப்பது. இல்லாவிட்டால் நாம் இருந்தும் ஒன்றுதான், இல்லாதிருந்தும் ஒன்றுதான். நம் படிப்பும் பட்டமும் இவன் காந்த வித்தையின் காலடியில் கிடப்பதா?".... என்றிவ்வாறு நெஞ்சு புழுங்கி, ஒரு சூழ்ச்சியில் தேர்ந்தனர்.

சூழ்ந்தது முடிக்க நல்லதொரு தருணம் வாய்த்தது. அரசியான மேரியாதெரிசா முன்னிலையிலேயே பியானேப் பெண்ணை மேரியாதெரேசாவுக்கு இழந்த கண்ணொளியைத்தான் கொடுத்தது எவ்வாறு என்று காட்ட, காந்த மருத்துவன் முன் வந்திருக்கிறான். அரசியும் அதற்கிணங்க, நாளும் பொழுதும் குறிப்பிடப்பட்டுவிட்டன. இந்தத் தருணத்தில் இவன் மானத்தைக் குலைக்காவிட்டால், நாட்டில் பின் நமக்குத் தலைநிமிர்ந்து நடப்பதற்கில்லை. கம்பனை இழிவு செய்ய அம்பட்டனை, சோழ அரச அவைக்கு, ஏனைய புலவர்கள் பொறுமை கொண்டு அனுப்பியதாகக் கதை இல்லையா? அந்தச் சூழ்ச்சியெல்லாம் சிறு பிள்ளை விளையாட்டாய் விடும்படியாக, இந்த மருத்துவப் புலவர்கள் ஒரு பயங்கரச் சூழ்ச்சி செய்தனர். ஒளிநலம் பெற்ற இசையணங்கின் நெருங்கிய உறவினரிடம் இரகசியமாய்ச் சென்றனர்: குசு குசு என்றனர் "உங்கள் பெண்மேல் அரசியார் எதனால் இவ்வளவு காதலாயிருக்கிறாள் என்பது தெரிகிறதா? அவள் பியானோ வாசிக்கிறாள் என்பதாலல்ல. குருடாக இருந்தும் வாசிக்கிறாளே என்பதால்தான். நாளை அவள் குருடில்லை, கண் திறந்துவிட்டது என்று இந்தக் காந்தக்காரன் காட்டப்போகிறான்; அப்பொழுது என்ன ஆகும்? அரசியார்க்கு உங்கள் பெண்மீது இருக்கும் சிறப்பான ஒரு பற்றுதல் குறைந்துவிடும். அதுமட்டுமா? அரசியார் என்ன உத்திரவிட்டிருக்கிறார்கள்? உங்கள் பெண் குருடாயிருக்கும் வரையில் உங்கள் குடும்பத்துக்கு ஆண்டாண்டு மானியமாகத்

தொகை கொடுக்கவேண்டும் என்று. யோசித்தீர்களா நாளை அவள் கண்திறந்துவிட்டால் உங்கள் மானியம் என்னுகுமென்று? இன்னென்று கூட நீங்கள் எண்ணவில்லையே. குருட்டுப்பெண் பியானே வாசிக்கிறுள் என்று இன்று திரளான மக்கள் கச்சேரிக்கு வருகின்றனர். சங்கீதத்தை இரசிக்கிறுர்களோ, அதன் உயர்வு தாழ்வை மதிக்கிறுர்களோ என்பன வேறு. நாளை அவள் திறந்த கண்களோடு வாசிப்பதாலுல் அதில் அற்புதமென்ன இருக்கிறது? கச்சேரி மற்றவர் கச்சேரி போல் சாதாரணமாகத்தானே இருக்கும். ஆகவே அவள் விழி பெற்றுவிட்டாள் என்று இந்தக் காந்தகாரன் அரச அவையில் உறுதி செய்துவிட்டானுல், அதை விடக்கேடு உங்களுக்கு வருவதொன்றில்லை."

"என்ன செய்யலாம்?"

"நீங்கள் பேசாது நாங்கள் சொல்லியபடி நடந்தால் போதும்."

"மேலே நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்."

"நல்லது. அப்படியே செய்கிறோம்."

உடன் பிறந்தே கொல்லும் வியாதிபோல் உறவினர் உருமாறினர். காந்த மருத்துவரின் அறையுட் புகுந்து தங்கள் தெரிசாப்பெண்ணை கறகற என்று வெளியே இழுத்தனர். அவள் மறுக்க, சுவரில் அவளை வேகமாக மோதினர். உடனே குழப்பம்; கலவரம். உடைவாட்கள் உருவப்

பட்டன. திடீரென்று ஏற்பட்ட அதிர்ச்சியால், தெரிசாவுக்குப் பலமுறை வலிப்பும் நடுக்கமும் பிறந்தன. நெடுநாளையச் சிகிச்சையால் பெற்ற வெற்றி யாவும் ஒருகணத்தில் தோல்வியாகியது. அதிர்ச்சியால் மீண்டும் கண்ணை இழந்தாள். டாக்டர்கள் திருக்கூட்டம் எக்களித்துத் திரும்பியது. காந்த மருத்துவர் அன்புத் தாய் தந்தையரோடு ஒருவாறாக சமாதானம் செய்துகொண்டு மீண்டும் மகளைத் தன்னிடம் ஒப்புவித்துப் போமாறு செய்தனர். மீண்டும் பலநாள் காந்த மருத்துவம் செய்து, மீண்டும் பலநாள் அவள் கண்ணொளியைப் பெறச் செய்தார். ஆயினும் என்ன? விஞ்ஞானிகள் விட்டனரா? "பாருங்கள். கண்ணொளியை அவள் உண்மையிலேயே உறுதியாகப் பெற்றவளாயிருந்தால் ஒரு கணநேரத்தில் அவள் அதைத் திரும்பவும் இழக்க முடியுமா? அவள் ஒளியைப்பெற்றதென்பதே இல்லை; வீண் கற்பனை செய்துகொண்டாள். இந்தக் கற்பனை செய்துகொள்வதற்கு இந்தக் காந்தக்காரன் எதோ மாயம் செய்கிறான். இதுவும் ஒரு மருத்துவ முறையாகுமா? நீங்களும் நம்புகிறீர்களே" என்றனர், விஞ்ஞானப் பொறாமைக் கூட்டம்.

இறுதியில் அவர்கள் செய்த எதிர்க் கிளர்ச்சியின் பயனாக அரசாங்கத்தார் ஒரு விசாரணைக் குழுவை நிறுவினர். விசாரணைக் குழுவில் இந்த டாக்டர்கள் தலைவர்கள்தானே இடம் பெற வேண்டும்? முடிபு என்ன ஆகும் என்று சொல்ல வேண்டியதில்லை. அரசியாரின் அரண்மனை மருத்துவரே

தலைமை தாங்க விசாரணைக்குழு தீர்ப்பை அளித்தது. நல்லவர்கள் நெறியை முடிவு செய்ய பொல்லாதவர்கள் கூட்டம் விசாரணை. ஆடுகளை விசாரிக்க ஒநாய்க் கூட்டம். அரசியலில் தான் இந்தக்கயமை என்றால் அறிவு உலகத்திலுமா இது மிகவேண்டும்? தீர்ப்பு என்னவாயிருந்தது ; காந்த மருத்துவன் மருத்துவர் தொழிற் சங்கத்திலிருந்து நீக்கப் பட்டான். நீக்கப்பட்டதோடு, வியன்ன பட்டினத் திருந்தும் விரட்டப்பட வேண்டும். அவ்வாறில்லாது அவன் பட்டினத்திருக்க விரும்பினால் மருத்துவம் செய்வதையே கைவிட வேண்டும்.

இப்படியாக வியன்னவை விட்டு வந்தவரைத் தான் கதைத் தொடக்கத்தில் பாரிஸ் நகரில் கண்டோம். வியன்னவில் எய்தாத புகழையும் மதிப்பையும் பாரிசில் பெற்றார். சோழன் விரும்பாத கம்பனைச் சேரன் வரவேற்றான். ஆஸ்திரியா அரசியார் கொடுத்த ஆதரவிலும் பரிவிலும் மிகுதியாகப் பிரஞ்சு அரசியார் புது மருத்துவருக்கே கொடுத்தார். கற்றோர்க்குச் சென்ற விடமெல்லாம் சிறப்பு.

மன்னவனும் நீயோ
வளநாடும் நின்னதோ
உன்னையறிந்தோ
காந்த வித்தை ஓதினோம்

என்று ஒரு கம்பனிருந்தால் காந்த மருத்துவர் பாடியிருப்பார். பல அறிஞர் அவர் உறவை நாடி விரைந்தனர். இந்தக் காந்த மருத்துவர் பெயரென்ன ? டாக்டர் மெஸ்மர். அவர் செய்து வந்த

மருத்துவம் யாது? மெஸ்மரிசம் — மனோவசியம். இதை எவ்வாறு அவர் பயின்றார்? எவ்வாறு கையாண்டார்? அதன் நுட்பம் என்ன? ஏதாவது உண்மை உண்டா? வெறும் ஏமாற் வேலைதானா?

“ நோய் நாடி, நோய் முதனாடி, யது தணிக்கும்
வாய் நாடி, வாய்ப்பச் செயல் ”

என்றார் எம் வள்ளுவர்.

காந்தத்தின் ஆற்றலால் பற்பலவாறான நோய்கள் எளிதில் குணமடைந்து வருவதைக் கண்ட டாக்டர் மெஸ்மர் தாமே அதைப்பற்றி ஐயுறலானார். சகலரோக நிவாரண் சஞ்சீவி என்று ஒரு மருந்தை இதுவரை மருத்துவ நூல் கண்டதில்லை. வயிற்றுப் பிழைப்புக்காய் விளம்பரஞ் செய்வதன்றி, வாழ்வில் பயன் பெறுவதான அத்தகையதொன்றை இன்று வரைக் கண்டிலேம். அன்றி, குணமடைந்து விட்டது என்ற ஒன்றையே நம்பி, விஞ்ஞான முறையாக நோயின் தன்மையையோ நோயின் முதற் காரணத்தையோ கண்டுவிட்டதாகப் பெருமைப் படுவதற்கில்லை. அவ்வாறாக ஏற்படும் குணத்தையெல்லாம் ஏதோ அற்புதச்செயல் வகையில் ஒன்றாகக் கருதப்படலாமே அல்லாது, முறையாக வந்த மருத்துவ முறையென்று பெருமைப் படுவதற்கில்லை. மருந்து எவ்வாறு வேலை செய்கிறது எவ்வாறு குணத்தைக் கொண்டு வருகிறது— என்பதைத் தெளிவாகத் தெரிந்து கொள்ள ஒவ்வொரு மருத்துவனும் விரும்புகிறான்.

மெஸ்மரும் அதை அறிய விரும்பினர். ஆனல் அவர் காலத்தில் உடற் கூற்றைப்பற்றி, உறுப்பு அமைப்பைப்பற்றி விரிவான அறிவு எதுவும் ஏற் படவில்லை. ஆராய்ச்சிகள் கிடையா; அறுத்துப் பார்த்துச் சோதனை செய்யும் அரிய பழக்கங்கள் கிடையா. எதற்கும் ஆதாரம் பண்டையோர் எழுதிய நூற்களே. வினையில் நீங்கி விளங்கிய அறிவன் கண்டது முதல் நூல் என்ற கொள்கை கீழ்நாடும், மேல்நாடும், எங்கணும் வலுத்து நின்றது. அந் நூற்கள் கண்ட முடிபே முற்றமுடிந்த முடிபுகளாகக் கொள்ளப்பட்டன. எனவே அவற்றை மேலும் மேலும் ஆராய்ந்து கண்டறிவதே மருத்துவ நுட்பம் காணும் நல்லாருகக் கொள்ளப்பட்டது. அந்த முறையிலேயே மெஸ்மரும், பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே எழுந்த கிரேக்க மருத்துவ அறிஞரான ஹிப்போகிரேட்ஸ், காலன் என்பவர்கள் நூல்களை ஆராய்ந்து கொண்டிருந்தார். இதனை நவீன விஞ்ஞான முறை என்று கொள்வதில்லை; தத்துவ விசாரணையின் பாற்பட்டதென்னலாம். எனவேதான் ஷோபனர் என்ற ஜர்மன் தத்துவ ஞானியும் கூட, "தத்துவ நெறி வாயிலாகப் பார்த்தால், மெஸ்மர் கண்டது அதியற்புதமானதொரு உண்மையாகும்" என்று சொல்ல நேர்ந்தது.

இந்தத் தத்துவ விசாரணைமுறை பெரும்பாலும் சுருதி அல்லது முன்னையோர் எழுதி வைத்த நூற் கருத்துக்களையும், யுக்தி அல்லது அறிவினற் செய்

யப்படும் யூகம் என்ற இரண்டையும் அடிப்படை யாகக் கொண்டது. காட்சிப் பிரமாணத்தால் படிப் படியாக இன்னவகையில் உடற்கூற்றை, உறுப் பமைப்பைத் திருத்தி மாற்றம் காண்கிறது என்பது விஞ்ஞான முறையின் பாற்பட்டது. இந்த முறை அன்றில்லாது போகவே மெஸ்மர் சுருதியையும் யுக்தியையும் கொண்டு பின்வருமாறு தன் மருத் துவ முறைக்கு விளக்கம் கூறலானார்: காந்த இரும்பு நோயைக் குணப்படுத்துகிறது. இந்தக்காந்த இரும்பு உலகத்துக்கு எவ்வாறு வருகின்றது? நட்சத்திரங் களின் பொறியாகப் பிரிந்து, குளிர்ந்து, இறுகிக் கட்டிமையுற்றுப் பூமியில் விழுகின்றது. நட்சத்திரங் கள், கிரகங்கள் என்பவையெல்லாம் மண்ணுலக இயற்கையும், மனித உடல் அமைப்பையும், இறுதி யில் அவர் வாழ்க்கையையும் மாறுபடுத்துகின்றன என்பது கண்கூடு. இல்லாவிட்டால் அமாவாசை பௌர்ணமி போன்ற நாட்களில் கடலலைகள் பொங்கி எழுவானேன்? மனநோய், விடநோய் கொண்டவர்கட்கு அத்தகைய காலங்களில் குறிப் பாய் நோய் தோன்றி வலுப்பதேன்? சிற்சில கோள்களின் கூட்டுக்காலங்களில் நோய்கள் குறைவதும் மிகுவதுமேன்?

இவற்றை யெல்லாம் நோக்கும்போது கோள் கள் மிக சூட்சுமமாக, கட்புலனுக்கெட்டாத முறை யில் உடல் நலனை உருப்படுத்துகிறது. நோய்களின் போக்கை நிர்ணயிக்கிறது. அப்படியிருக்க இந்தக் கோள்களின் சிறு பிண்டமாகப் பிரிந்து வந்த

காந்தக்கற்களுக்கும் அதே ஆற்றல் இருக்க வேண்டும். நமது உடலில் மின்சாரம் நீக்கமறப் பாய்ந்து கொண்டிருக்கின்றது. அது போலவே இந்த நட்சத்திர, கிரகசக்தியும் நீர் வடிவாய் ஒழுகிக் கொண்டிருக்கிறது. இந்த ஒழுக்குக்கும் காந்தக் கல்லில் ஒழுகும் ஆற்றலுக்கும் தொடர்பு ஏற்பட்டதும், உடலிலே மாற்றம் ஏற்படுகிறது. நோய்கள் நலிவடைகின்றன.

அன்றைய ஆராய்ச்சி நிலையில் டாக்டர் மெஸ்மருக்கு இதுபோதிய தத்துவமாகத் தெரிந்தது. இதை விட வேறு விஞ்ஞான சாட்சியங்களை அவர் தேட வேண்டிய தில்லாதிருந்தது. எனவே எவ்வித ஐயந்திரிபும் மனத்திலின்றி, மிக்க உறுதிப் பாட்டோடு தன் மருத்துவமுறையை வேகமாகக் கையாண்டு கொண்டு வரலானர். பற்பல வித நோய் கொண்ட பற்பல நோயாளிகளுக்கும் சிகிச்சை செய்து, வெவ்வேறளவு குணநலம் கண்டு கொண்டே வந்தார். இப்படியாக நடந்து கொண்டிருக்கையில் அதிர்ச்சி தரக்கூடிய நிகழ்ச்சி யொன்று எழுந்தது. காந்தக் கம்பிதான் வேண்டுமென்பதில்லை. எதை வைத்தும் ஒரு கல்லையோ, கட்டையையோ, காகிதத்தையோ கண்ணாடித் துண்டையோ, தோலையோ, தண்ணீரையோ ரொட்டித்துண்டையோ-நோயைக் குணப்படுத்தும் ஆற்றல் தனக்கிருப்பதாகத் தெரிந்தது. இதென்ன பெரிய தொல்லையாய் வந்ததே! கோள்களின் சக்தியால் யாவும் குணமடைகின்றது என்று அரிதில் நிலைநாட்டிய தத்துவத்தைத் தூக்கி

எரிவதாயிருக்கிறதே. அப்படியானல் ஒரு மாந்திரீகனுக்கும் தனக்கும் வேற்றுமையில்லையா? இதுவா மருத்துவ முறை? இல்லை. இந்த உண்மை வேருகயிருக்கவேண்டும். மீண்டும் ஆராய்ந்து காண வேண்டும். பழைய நூற்களில் மீண்டும் நுழைந்து துருவினர்.

" காந்த சக்தி என்பது ஏதோ உண்மைதான். ஆனல் அது இரும்பைமட்டும் பற்றும் ஆற்றலுடையதென்பதில்லை; பிறபொருள்களையும் பற்ற வல்லது. நான் பற்பல பொருள்களை அறிந்தும் அறியாமலும் தொட்டு விடுகிறேன். அவை ஒவ்வொன்றிலும் என் வழியாக இந்தக் காந்தம் பாய்கின்றது. பாயவே, அவை யாவும் காந்த சக்தியைப் பெற்று, ஆதிக் காந்தக் கல்லைப்போலவே, நோய்களைக் குணப்படுத்தும் ஆற்றல் பெற்று விடுகின்றன."—இப்படியாக மீண்டும் விவகரித்துத் தேர்ந்து கொண்டு, முன்போல் சிகிச்சையை விடாது நடத்தி வரலானர்.

இதற்குப் பிறகாவது நிம்மதியாக இருக்கலாமென்ருல், அதற்குமில்லை. அதிர்ச்சிமேல் அதிர்ச்சி. காந்தம் பாய்ந்த எப்பொருளேனும் வைத்து சிகிச்சையை நடத்தலாமென்றிருந்தது கூட வேண்டாததாகிவிட்டது; தன் கைகளால் தொட்டாலே போதும்; நோய் குணமடைந்து விடுகிறது, இதென்ன ? மேலும் சிந்திக்கலானர் ; மேலும் தொன்னூற்களை ஆராயலானர். சிந்தித்துச் சிந்

நித்து, ஆராய்ந்து ஆராய்ந்து, தத்துவநெறியின் ஒரு எல்லைக்கு வந்தார். காந்தமும் வேண்டியதில்லை; காந்தமேறிய பொருள்களும் வேண்டுவதின்று. தானே காந்தம் நிறைந்து நிற்கிறார். இந்தக் காந்தம் தன்னுடலிலிருந்து நோயாளிகள் உடலுட் பாய்ந்து குணத்தைக் கொடுக்கிறது. இது உண்மையான உறுதியான ஒரு சக்தி மின்சாரம் போன்றது. அதாவது "உடற் காந்தம்". இந்த "உடற் காந்தம்" தான் குணம் செய்வது. இதைத் தெரிந்துகொள்ளாமல், அந்த வியன்ன நகரத்து மருத்துவர்கள் தன்னை என்னென்னவோ சொல்லிப் பழித்தார்கள். எல்லாம் நோயாளியின் மனக் கற்பனை என்றார்கள். அவர்கள் நம்பிக்கையே காரணம் என்றார்கள். குணம் வெறும் பொய் என்றார்கள். உடற்காந்தம் உறுதியான நிலையான ஒரு சக்தி என்று அறிந்தாரில்லை.

மெஸ்மர் ஒரு தத்துவ உண்மையின் எல்லையை அடைந்தார் என்றேன். எல்லையின் விளிம்பை அடைந்தார் என்றே சொல்லவேண்டும். இன்னும் ஒரு அடி மேல் எடுத்து வைத்திருந்தால் உண்மையின் முழுவடிவை உலகுக்கு உறுதியாக எடுத்துக் காட்டி நிலை நாட்டியிருப்பார். ஆனால் அதைச் செய்வதற்குத் தவறிவிட்டார். தன்னை யண்டி வந்த நோயாளிகளைத் தான் தொட வேண்டியது கூட அவசியமில்லை. தான் அந்த இடத்தில் இருந்தாலே போதும். எதிர்பார்த்த குணம் பிறந்துவிடுகிறது. இதை அவர் உணர்ந்தாரில்லை; அல்லது உணர்க்

தும் ஒப்புக்கொண்டாரில்லை. உடற்காந்தம் என்ற உண்மையின் அடிப்படை என்ன என்பது மட்டும் தெளிவாகக் காண முயன்றிருப்பாரானால், எல்லாம் ஒழுங்காகிவிட்டிருக்கும். ஆனால் இறுதி வரை அதைச் செய்யாது, கிரகங்களிலிருந்து வரும் காந்தம் என்ற பழைய கொள்கையையே மீண்டும் வற்புறுத்தி வந்தார்.

உண்மையின் திருவுருவம் மின்னிய போதும் அதன் திருந்திய படிவம் விளங்காது மெஸ்மர் மயங்கினார். தான் சிகிச்சை செய்ய முயன்ற நோயாளிகளெல்லாருமே முற்றும் குணம் பெற்றிலர். சிலர் குணம் பெறாது சென்றதற்குக் காரணம் என்ன? தன்னுடலிலிருந்து அவர்கள் உடலுக்குக் காந்த சக்தி, பாய்ந்து தானே சென்றது. யோசனை செய்யலானார். சிற்சிலர் இந்தக் காந்த சக்தியை எதிர்க்க வல்லவராய் இருக்கின்றார்கள். நோயாளி தான் குணமடைய வேண்டுமென்று மெய்யாகவே விரும்ப வேண்டும்; மருத்துவனிடத்து முழு நம்பிக்கையுடையவனுயிருத்தல் வேண்டும், இருவரும் ஒத்துழைக்க வேண்டும். அப்பொழுதுதான் குணம் ஏற்படுகின்றது. இருவருக்கும் ஏற்படவேண்டிய இந்த பரஸ்பர நம்பிக்கையை ஒத்த உணர்ச்சி என்றார். எவ்வளவு உண்மையின் சன்னிதியின் அருகு நெருங்கிவிட்டார்! கர்ப்பக்கிருகத்துக்குள்ளும் நுழைந்தாகிவிட்டது. இன்னும் ஒரு கால் எடுத்துவைத்திருந்தால் உண்மைக் கோயிலின் மூலஸ்தானம்; உள் எல்லை; உண்மைத் தெய்வத்தின் திருவடியே. ஆனால் அதற்கு ஒரு சிறிது துறவு வேண்டியதாயிற்று.

பழமை மாயாமலம் ஒன்று கழியவேண்டிய தாயிற்று. அநாதியாகிப் பற்றுக்கோடாகி வந்த அஞ்ஞானம் ஒன்று அகல வேண்டியதாயிற்று. உடற்காந்தம் என்று கோள்களிலிருந்து தன் உடல் வழியாய் நோயாளியுடலிற் பாய்ந்து குணம் தரும் காந்த நீர் எதுவுமில்லை, என்பது கைவிடப் படவேண்டியதாயிற்று. அப்படிக்கைவிடப்பட்டிருந் தால், இந்தக்காந்த சக்தி, மின்சாரம் போன்று பருப்பொருள்கள் கூட்டுறவால் வருவதொன் றில்லை; அது மனோ சக்தி. மருத்துவன் மனத்தால் எண்ண, நோயாளி எண்ணியாங்கு நலம்பெறும் ஒரு சக்தி என்ற மனோ தத்துவ உண்மை தெள்ளிதிற் புலனாயிருக்கும். பிராய்ட் என்ற மனநூற் புலவர் பின் கண்டதை, நூற்றாண்டுகளுக்கு முன்னரே மெஸ்மர் உலகுக்கு எடுத்தோதி யிருப்பார். ஆனால் அவர் அதைச் செய்ய அன்று துணியவில்லை. அவர் பிழையுமன்று. மேலை நாடுகளிலே அன்று மன நூல், உள் நூல் என்ற எதுவும் பிறந்தே இல்லாத காலம். யாவற்றுக்கும் பருப்பொருள் வடிவாயும், உடற்கூற்று நெறியாயும் விளக்கம் கண்ட காலம்.

இதனாலேயே எதிரிகளான மருத்துவர்கள் இவர் சிகிச்சையில், நோயாளியின் மனோகற்பிதம் தவிர வேறொன்றுமில்லை யென்ற பொழுது, இரு வருக்கும் வருத்தம் எழுந்தது. மனோகற்பிதம் தான் என்று இவர் ஒத்துக்கொண்டிருப்பாரானால், உண் மையை ஒருவாறு கிட்டிப் பிடித்தவராவர். ஆனால் அதற்குரிய துணிவு வரவில்லை. ஒத்துக் கொண்

டால் விஞ்ஞானத்துக்கு மாறுபட்டதாகுமே. தன் சிகிச்சை முறை ஏதோ மந்திரவாதம் பில்லி சூனியம் போன்றவற்றின் வகையில்படுமே; உடற்கூற்று வகையில் விளக்கம் காண்பதாயிராதே என்று தயங்கினர். மனக்கற்பிதம்தான், மனோசக்திதான், இதுவேன் விஞ்ஞான முறையாயிருத்தலாகாது என்று எதிர்த்துச் சொல்லும் அளவில் அன்று விஞ்ஞானம் வளர்ச்சி அடையவில்லை. மனத்தத்துவ நூற்கள் தோன்றவில்லை.

பிரஞ்சு தேசத்துப் பிரபல விஞ்ஞானிகள் கழகத்துக்கு விஷயம் சென்றது; அவர்கள் விஞ்ஞான நிபுணர்கள் கொண்ட ஒரு விசாரணைக் குழுவை நிறுவினர்கள். அதிலே அன்று புகழ் போன தாவர நூல் விற்பன்னர்கள், பௌதிக நூல் நிபுணர்கள், வானநூற் பண்டிதர்கள் போன்றவரெல்லாம் இடம் பெற்றனர், மின்சாரத்தைக் கண்டு பிடித்திருக்கும் பெஞ்சமின் பிராங்கிலின் இருந்தார்; புதியவகையில் தூக்குமேடை ஏறும் ஒரு இயந்திரத்தைக் கண்டு பிடித்த டாக்டர் கில்லட்டின் என்பவரும் இடம்பெற்ருர். அணுக்குண்டை கண்டுபிடிப்பவர் இன்று விஞ்ஞான நிபுணரென்ருல் புதிய தூக்கு இயந்திரத்தைக் கண்டுபிடித்தவர் அன்று விஞ்ஞானியே. இவ்வளவு நிபுணரிருந்தும் மனநூற் புலவர் ஒருவர் மருந்துக்குக்கூட இடம் பெறவில்லை. அப்படி ஒரு துறை இருந்தால்தானே நிபுணர் வருவதற்கு ?

"மனக்கற்பிதமே யாவும் இந்த சிகிச்சை முறையில். காந்தம் என்றெல்லாம் எதுவுமில்லை"—என்பதே அவர் அளித்த தீர்ப்பாகியது. நவீன தாவரநூலின் தந்தையென்று பெயர் பெற்ற தெஜூஸ்ஸியோ என்பவர் மட்டுமே சற்று மாறுபட்ட கருத்துடையவராய்க் காணப்பட்டார். உண்மையை ஓரளவு தரிசனம் செய்யும் ஞானம் படைத்தவராயிருந்தார். எல்லோரும் மனோகற்பிதமே குணமளிப்பது என்றனர். அப்படியே மனோகற்பிதமானால், அது ஏதோ மிகுந்த ஆற்றல் வாய்ந்த தொன்றாகத்தானே இருக்கிறது. அதையேன் வெறும் கற்பிதம் என்று கூறிப் புறக்கணிக்க வேண்டும்? என்றார்.

"மனித உடலத்தை எத்தனையோ சக்திகள் பாதிக்கின்றன. சில புறச்சக்திகள். சில அகச் சக்திகள். மனக்கற்பிதம் என்று சொல்வது இந்த அகச்சக்திகளில் ஒன்றுதானே. ஒரு மனிதனிடமிருந்து தோன்றி வெளிப் போந்து, மற்றொரு மனிதனைக் கண்கூடாகத் தெரியுமளவில் பாதிக்கின்ற ஏதோ ஒரு சக்திதானே இந்த சிகிச்சையின் அடிப்படையாக இருக்கிறது. அந்த சக்தி என்ன என்று ஆராய்வோமே"—என்று தனது கருத்து வேற்றுமையை விளக்கினர். ஆனால் நிபுணர் குழுவில் எவரும் அது ஆராய்தற்குத் தகுதியுடையதென்று மதித்தாரில்லை. அற்ப விஷயம்!

ஆனால் அன்று பாரிஸில் இருந்த ஒரே ஒரு டாக்டர் மட்டும் இது ஆராய்தற்குரியது என்று

கருதினர்; தானே மெஸ்மரிஸத்தைப் பயின்று ஆராயவும் செய்தார். இவர் அரசருடைய தம்பியின் அரண்மனை மருத்துவர். டி எல்ஸன் என்ற பெயரினர். ஆராய்ச்சியின் பயனைப் பின் வருமாறு எழுதலானர்,

"விசாரணைக்குழு நிபுணர்கள், உடற்காந்தம்" என்று சொல்லப்படுவது எல்லாம் பெரும்பாலும் மனோகற்பிதம் என்றார்கள். அந்த அளவுக்கு அவர்கள் கருத்து ஒப்ப வேண்டியதே. முற்றுமே மனோகற்பிதமாகவே இருக்கலாம். இருந்தாலென்ன? மனோகற்பிதம் என்பதை எவ்வளவுக்கு நாம் அறியாதிருக்கிறோமோ, அவ்வளவுக்கு மேலாக அதற்குச் சக்திவாய்த்திருக்கலாம். அதை ஏன் நாம் பயன்படுத்திக் கொள்ளலாகாது? அது குணம் கொடுக்க வல்லதானல், ஏன் கைக்கொள்ளலாகாது, ஏன் அதைப்பற்றி மேலும் தெரிந்து கொள்ளலாகாது? மனோகற்பிதம் சரீர ஆரோக்கியத்தை அடிப்படையாக மாற்றவல்லது என்ற ஒன்றையே நிலைநாட்டியதே மெஸ்மருக்குப் பெருமையாகும். தலைசிறந்த மருத்துவருள் அவர் ஒருவர் என்று மதிப்பிட அது ஒன்றே போதாதா? மனித அறிவு கண்ட அற்புதங்களில் மிகச் சிறந்த ஒன்றே அவர் கண்ட உண்மை என்றே எனக்குப் படுகிறது"—என்று எழுதினர். ஆனல் மெஸ்மருக்கோ இத்தகைய விளக்கமும் நற்சாட்சியும் சற்றும் ஏற்றதாயில்லை; இதைவிட விசாரணைக் குழுவார் அளித்த கண்டனத் தீர்ப்பு மேலென்று தோன்

றியது. ஆனல் மெஸ்மரும் தவறினர்; விசாரணைக் குழு நிபுணரும் பெருந்தவறிழைத்தார். தேஜுஸ் லியூ என்ற தாவரநூல் நிபுணரும் டி எல்ஸன் என்ற மருத்துவருமே உண்மையை அறிந்தார். எந்த மனோதத்துவ வகையான விளக்கத்தை மெஸ்மர் வெறுத்தாரோ, அதுவே மெய்யான விளக்கம் என்பதைப் பின்னே வந்த மனநூல் வளர்ச்சி உறுதியாக நிலைநாட்டியது.

ஆண்டுகள் இருபத்தைந்து சென்றன. ஜர்மன் தலைநகரான பெர்லினிலிருக்கும் விஞ்ஞானக் கழகத்தின் பிரதிநிதியாகப் பேராசிரியர் வால்பர்ட் என்பவர் காண்ஸ்டன்ஸ் என்னும் ஏரிக்கரையில் அமைந்த மீர்ஸ்பர்க் என்னும் சிற்றூருக்கு வந்து, டாக்டர் மெஸ்மர் என்பவர் எங்கிருக்கிறார் என்று கேட்டுக்கொண்டிருந்தார் "மெஸ்மரா? அந்தக் கிழவர்தானே? எங்களுக்கெல்லாம் வைத்தியம் செய்கிறாரே, அவர்தானே? அதோ அந்த வீடு" என்று ஒரு சிறு வீட்டை ஊர்மக்கள் சுட்டிக்காட்டினர். குங்கும அங்கி அணிந்து, இசைக்கலையின் வள்ளலாய் விளங்கி, அரசர்கள் நண்பனாய்த் திகழ்ந்து, பிரான்ஸை விட்டுப் போகலாகாதென்று பிரெஞ்சு மன்னர்மன்னன் வழங்கிய பெரும் உதவித் தொகையையும் வேண்டாமென்று மறுத்து வந்த புகழ் பெற்ற கம்பீர புருடன் என்பது அவர்களுக்குத் தெரியாது. ஏதோ நல்லவர்; பெரியவர்; உடற்காந்தம் என்று சொல்லிக்கொண்டு தங்களுக்கு வரும் நோய்களை அவ்வப்போது குணப்படுத்

திக் கொண்டிருக்கும் முதியவர் என்றே அவர்கள் தெரிந்திருந்தார்கள்.

பெர்லின் விஞ்ஞானக் கழகத்தின் சார்பாக வந்த பேராசிரியர் வால்பார்ட், டாக்டர் மெஸ்மர் திரும்பவும் பெர்லினுக்கு வந்து நீத்த புகழை மேற்கொள்ள மறுத்து விட்டார் என்று அறிக்கை செய்தார். போதும் போதும்; இந்த விஞ்ஞானிகள் கையில் வியன்னாவில் பட்டதும்; பாரிசில் பட்டதும். பெர்லின் ஒன்று தான் பாக்கி. வால்பார்ட் எழுதுகிறார்.

"பல திறப்பட்ட விஞ்ஞானத் துறைகளிலே தனி மனிதன் பெற இயலாத அறிவைக் கொண்டிருக்கிறார். அதோடு எவர் மாட்டும் நிறைந்த அன்புடையவராய்த் தோன்றுகிறார். இந்த அன்பு அவர் மனம், மொழி, மெய், சூழ்நிலை ஆகிய ஒவ்வொன்றிலும் படிந்து விளங்குகிறது. கண்ணோக்காலும், கைகளை மெல்ல உயர்த்தியும், தன் நோயாளிகளைத் தன் வயப்படுத்தும், ஆற்றலை அற்புதமாகக் கொண்டிருக்கிறார். அவரது ஒழுக்கமனைத்தும் நிறைந்த மரியாதையையும் பயபக்தியையும் உண்டுபண்ணுவதாயிருக்கின்றது."

இத்தகைய ஒரு பெரியாரை விஞ்ஞானம் விரட்டி அடிக்காது, கண்டித்து ஒறுக்காது, வேண்டிய உற்சாகம் அளித்திருந்தால் மனநூல் மருத்துவ முறை நூறாண்டுகள் மேநாடுகளில் பின்னடைந்திராது. மூளையின் வழியாய் மனதுக்குக் குணம்

120701

கண்ட பிரோகாவுக்கு நூறுண்டுகளுக்கு முன்னரே மனத்தின் வழியாய் மூளைக்குக் குணம் காணும் முறையை மெஸ்மர் கண்டார். இவை இரண்டும் வெவ்வேருய்ப் பாய்ந்து இறுதியில் கூடின. இந்தக் கூடலில் எழுந்தது தான் இன்றைய மனமருத்துவ நூல். முதல் உலகப் போரின் போதும் இரண்டாம் உலகப் போரின் போதும் இந்தப் புதுமருத்துவக் கலை செயற்கரும் குணநலங்களை உண்டு பண்ணி, இன்று நிலையான மருத்துவ முறையாய் இடம் பெற்று விட்டது.

டாக்டர் மெஸ்மரின் வாழ்க்கையைப் படித்த பின் எனக்குப் பற்பல ஐயப்பாடுகள் எழலாயின. மூட நம்பிக்கை, மூடப் பழக்க வழக்கங்கள் என்று நாம் நினைப்பவை எல்லாம் உண்மையிலேயே அத் தகையவைதானு? மெஸ்மர் கூறி வந்த உடல் காந்தம் என்ற ஆற்றலையும் விஞ்ஞானிகள் முதலில் அப்படித் தானே ஒதுக்கித் தள்ளினர்கள். அப்படி ஒதுக்கி அடித்ததால் நூறுண்டுகள் வரை உண்மை தெளிவு படாதுபோனதோடு, எத்தனையோ ஏமாற்றுக்காரர் செப்பிடு வித்தைக்காரர் கையில் அது அகப்பட்டு, வயிற்றுப் பிழைப்புக்குரிய வழியாகி, கெட்ட பெய ரையும் தேடிக்கொள்ளும் நிலை ஏற்பட்டதே. நூற்றுண்டு வரை மன தத்துவ நூல் வளர்ச்சியடை யாது தடைபட்டு விட்டதே. ஆகவே எதையும் நன்ருக ஆராய்ந்த பிறகே ஒரு முடிவு கூறவேண்டும். ஆராயாது மூடநம்பிக்கை, மூடப்பழக்கம் என்று சொல்வது போலிவிஞ்ஞான முறையே ஆகும்.

இந்த மெய்யான விஞ்ஞான முறையின் அடிப்படையான தத்துவ நியதியை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் தனக்கு முன்னும் பின்னும் ஒப்பாரும் மிக்காருமில்லாத முறையில் பொய்யில் புலவன் எவ்வளவு சுருக்கமாகச் சொல்லிப் போய்விட்டான்.

எப்பொருள் யார்யார் வாய் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

மூர்த்தி, தலம், தீர்த்தம், விருட்சம் என்று சிறப்பாகச் சொல்லுகிறார்கள். தெற்கே திருநெல்வேலி மாவட்டத்திலே சங்கரநயினார் கோவில் இருக்கிறது. அதிலே கோமதி அம்மன் சன்னிதியில் கல்தளத்தில் சிறிய குழியொன்று காணப்படுகிறது. மனநோய், நரம்பு நோய் கொண்ட பெண்கள் அந்தக் குழியின் மீது சிலநாட்களிருக்க, அவர்களுக்கு நடுக்கம், ஆவேசம் முதலியன வந்து நோய் குணமடைவதாகக் கூறுகிறார்கள். கீழ்க் கடற்கரையில், தஞ்சாவூர் மாவட்டத்தில் முஸ்லீம்கள் கோயிலாகிய நாகூராண்டவர் சமாதியிருக்கிறது. இங்கேயும் இம்முறையில் நாடோறும் பலருக்குக் குணம் ஏற்படுவதாகக் கேள்வி. உண்மை விஞ்ஞானி என்றால் எல்லாம் பூசாரிகள், மௌல்விகள்ஏமாற்று என்று சொல்லி நடந்து விடமாட்டான். அதில் யாதானும் உண்மை இருக்கிறதா என்று முதலில் ஆராய்வான். ஆராய்ந்த பின்னரே முடிபுக்கு வருவான். இப்படி ஆராயாது, ஏமாற்று வித்தை என்று ஒரே மூச்சில் கூறுவதால் விஞ்ஞான வளர்ச்சிக்குத் தொண்டு செய்தவனாகமாட்டான்.

பல இடங்களில் தீக்குளித்தல் நடைபெறுகிறது. நெடுநாளாக அதன் உண்மை எனக்கு விளங்காமலே இருந்தது. இப்பொழுதும் விளங்கவில்லை. எப்படி தீயில் கால் வைத்தவர்களுக்கு தீ சுடாதிருக்கிறது என்பது விளங்கவில்லை. நோன்பு விரதம் முதலியன, வெற்றிபெறத் தீக்குளித்தலுக்கு வேண்டா என்பதுதான் வெளியாகியிருக்கிறது. அப்படியானால் எவரும் தீக்குளித்துவிட முடியுமா?

மூர்த்தி, தலம் தீர்த்தம் என்று குறிப்பிட்டேன். சங்கரநாயினார் கோயிலில் மனநோய்கள் குணமடைவதாகச் சொல்வதையும் குறிப்பிட்டேன். சன்னிதியின் முன் தளத்திலிருக்கும் சிறு குழியின் மீது நெடுநேரம் உட்கார்வதால் நலம் ஏற்படுகின்றது என்ற நம்பிக்கையையும் சுட்டினேன். இதை நம்புகிறவர்கள் இதற்கு ஒரு வகையாக விளக்கம் செய்கிறார்கள். அதாவது, அந்த குழிக்கடியிலே, மந்திரம் ஏற்றி ஒரு சக்கரம் தாபனம் செய்யப்பட்டிருக்கிறது. அந்தச் சக்கரத்தில் படிய வைத்திருக்கும் கட்டுண்ட ஆற்றல் மெல்ல வெளிப்போந்து அதன் மீது உட்காருவோருக்கு சாந்தி அளிக்கின்றது என்கிறார்கள். இது மெஸ்மர் சொன்ன முறையில் கிரகங்களிலிருந்து மனித உடலுட்பாயும் உடற்காந்தம் நோய்களை குணப்படுத்துகின்றது என்ற வகையாக வரும் ஒரு விளக்கமாயிருக்கலாம். உண்மை, பின் மெஸ்மர் கருத்தை விஞ்ஞான ரீதியில் ஆராய்ந்து, அனைத்தும் மனக்கற்பிதம் சங்கற்பம் என்பதைப் போன்றதாயிருக்கலாம். அதையன்று

நான் இங்கு எழுத வந்தது. இப்படி கோமதி நாயகி முன்னிலையில் குறித்த இடத்தில் உட்கார்வதால் ஏதாவது குணம்தான் ஏற்படுகிறதா? நூற்றில் எத்தனை பேருக்கு அந்தக்குணம் ஏற்படுகிறது என்பவை யெல்லாம் காட்சிஅளவில் அருகிருந்து காய்தல் உவத்தலின்றி நடுவுநிலையாக ஆராய வேண்டியவை. கோயில்களை இடிக்குமுன், அவற்றுள் யாதாயினும் உண்மை உண்டா என்று அறிந்து கொண்டு, பின் வேண்டியபடி செய்யலாம்.

ஒரு மொட்டைக் கல்லுக்கு, ஒரு குட்டைக் குளத்துக்கு இவ்வளவு சக்தி உண்டா என்று தள்ளிவிடக் கூடாது. மெஸ்மர் முதன் முதலில் கல், மண், இரும்பு, காகிதம், தோல்—யாவற்றிலும் காந்தத்தை ஏற்றி, கருவியாகப் பயன் படுத்தினார் என்பதை மறந்து விடக்கூடாது. பின்னர் இவை யொன்றுமே வேண்டியதின்று, தன் பார்வையே போதும், நினைப்பே போதும் என்று கண்டார். ஆனால் தான் எக்காலமும் எல்லாவிடத்தும் சிரஞ்சீவியாக இருக்கமுடியுமா? முடியாதாகவே, ஏன் தன் மனோ சக்தியை ஒரு கல் மீதோ மரமீதோ நிலையாக ஏற்றி வைத்துப் பெருவாரியான மக்கள் பயனடையுமாறு செய்யலாகாது? இந்த வகையில் "யான் கண்ட இன்பம் இவ்வையகம் பெறுக" என்று எழுந்தனவா யிருக்கலாம், மூர்த்தி, தலம், தீர்த்தம், போன்றவை யெல்லாம். எனவே சக்கரத்தில் மந்திரஞ் செபித்து மன ஆற்றலை ஏற்றி நிலையாகத் தளத்தின்மீது பதித்து வைத்திருக்கலாம். அது அவ்வப்போது

வந்து நெருங்குவோருக்கு மனக்கற்பிதத்தை யுண்டு பண்ணி, குணத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கலாம். யார் கண்டார்கள்?

இப்படி நடப்பதில் அற்புதமொன்றுமில்லை. மெஸ்மரே இதைச் செய்து காட்டியிருக்கிறார். பாரிஸ் நகரில் ஒரு பெரிய மரத்தின்மீது தன்மனோவசிய ஆற்றலை ஏற்றிவைத்துவிட்டார். அந்த மரத்தடியில்வந்து நின்று, கிளைகளைத் தொட்டு, இளைப்பாறியதினாலேயே மனநோய் கொண்ட பலர் குணமடைந்தனர் என்று விஞ்ஞான ஏடுகள் ஒப்புக்கொண்டிருக்கின்றன. மெஸ்மர் மட்டுமல்ல, அவருடைய புகழ் வாய்ந்த சீடராக வந்த புசேகர் என்பவரும் இந்தமுறை ஒன்றையே சிறப்பான கருவியாகக் கையாண்டார். புசேகர் பெரிய நிலக்கிழவர். பிரபுக்கள் இனத்தைச் சார்ந்தவர். பெரும்பாலான குடிமக்கள் அழைத்தாலும் தன் மாளிகைக்கு வரத் தயங்குவார்கள் என்பதை அறிந்து, அவர்கள் ஊருக்குச் சென்று, ஊர் நடுவே இருந்த ஒரு எல்ம் மரத்தில் வசிய ஆற்றலை ஏற்றினார். மரத்தைச் சூழ்ந்து இருப்பிடங்கள் அமைத்தார். மரக்கிளைகளிலிருந்து நீண்ட கயிறுகளைத் தொங்கவிட்டார். குடியானவர்கள் ஓய்வு நேரத்தில் அம்மரத்தடியில் வந்து பொழுது போக்குவது வழக்கம். இப்படியாக வந்து இருக்கைகளிலமர்ந்து, கிளைகளிலிருந்து தொங்கும் கயிறுகளைப் பற்றி, சற்று இளைப்பாறினதும், நடுக்கம், ஆவேசம் முதலியன வந்து நோய் கொண்ட நூற்றுக்கணக்கானவர் குணம் கண்டனர்.

இவையெல்லாம் புராணப் புளுகல்ல; தலவரலாற்றுக் கற்பனைகளல்ல. அப்படியிருக்க நமது மூர்த்தி, தலம், தீர்த்தம், விருட்சம் என்பவற்றிலும் யாதானும் விஞ்ஞான அடிப்படை இருக்கின்றதா என்று காண வேண்டாமா? விஞ்ஞானம் நெடுநாள் வரை கண்ணுக்குத் தெரிந்தவற்றைப் பற்றியே கவலை கொண்டிருந்தது. பிறகு மின்சாரம், அணுபோன்று கண்ணுக்குத்தெரியாதவற்றைப் பற்றியும் கவலைகொள்வதாயிற்று. இவையெல்லாம் காலம், தேசம் என்ற இரண்டுக்குள் அடங்கியவை. மனம் நினைப்பு எண்ணம் என்பவையெல்லாம் காலத்தையும், அண்ட வெளியையும் கடந்தவை. அவற்றைப் பற்றியும் விஞ்ஞானம் இன்று கவலை கொள்ளத்தொடங்கி யிருக்கிறது. போகப் போக, புதுப்புது உண்மைகள் வெளிப்படலாம். அல்லது அவை மிகப் பழமையான உண்மைகள்-இடைக்காலத்து நாம் மறந்தவை, அல்லது நம்மிடமிருந்து மறைக்கப் பெற்றவைகளாக முடியினும் முடியலாம். அப்பொழுது இன்றைய விஞ்ஞானம் நாளைய மூடப்பழக்கமாகலாம்; மூடப் பழக்கம் விஞ்ஞான மென்று வரலாம். பழமை மிகப் புதுமையாய் மிளிரலாம். புதுமை எனப்படுவது கழிய வேண்டும் பழமையுட் பழமையாயினும் ஆகலாம்.

மெஸ்மரின் சீடருள் ஒருவரான புசேகர் என்ற பிரஞ்சு பிரபு, தனது குடியானவர்கள் நலனுக்காக அவர்கள் கிராமத்து நடுவே இருந்த பெரியதொரு எல்ம் மரத்தில் மன ஆற்றலை ஏற்றி, மரத்தைச் சூழ பல இருக்கைகளை அமைத்து, வசிய சக்தி பாயுமாறு

கிளைகளிலிருந்து பல கயிறுகளையும் தொங்கவிட்டு வைத்தார் என்று முன்னே கூறினேன். இந்த எல்ம் மரமானது வள்ளுவர் கூறிய

> பயன்மர முள்ளூர்ப் பழுத்தற்றாற் செல்வம்
> நயனுடை யான்கட் படின்

என்ற குறளுக்கு விளக்கம் காணுவது போலிருந்தது. துன்புற்ற ஏழை மக்கள் பலர், மரநிழலில் தங்கி, களைப்பு நீங்கி, மனத்தையும், உடலையும் பற்றிய பல நோய்களும் நீங்கி, குணமடைந்து வந்து கொண்டிருந்தனர். தனது ஆசிரியனைப் போலவே புசேகரும் எளியவர்க்கு எளியவராய், கிராமமக்களோடு நெருங்கி உறவாடி, பொறுமையோடு அவர்கள் சுகதுக்கங்களைக் கேட்டறிந்து அரிய சமூகத்தொண்டு புரிந்து கொண்டு வரலாயினர்.

# எஸ். எஸ். பிள்ளை.

---

தென்னடு முழுதும் பன்னூருண்டுகளாக வேளாளர் என்பாரே கணிதத்தில் வல்லவராய் வந்திருக்கிருர்கள். கணக்கப்பிள்ளை என்பதே பெருவழக்கம். மலையாள நாடான திருவாங்கூரிலே ஐம்பது அறுபது ஆண்டுகளுக்கு முன்வரையிலும் வலியமேலெழுத்து என்ற உயர்ந்த ஒரு உத்தியோகம் இருந்தது. தற்பொழுது அக்கவுண்டன்ட் ஜனரல் என்று சொல்வதற்கு நிகரானது. ஊர்க் கணக்கு முதல் இந்த வலியமேலெழுத்து வரையிலும் எல்லாக் கணக்குச் சம்பந்தமான அலுவல்களையும் தமிழ் வேளாளர்களே ஏகபோகமாக அனுபவித்து வந்தவர்கள். அவர்களே தகுதியாளராய் விளங்கிளுர்கள்.

இத்தகைய ஒரு வேளாண்குடியில் செங்கோட்டையில் ஏறக்குறைய நாற்பத்தெட்டு ஆண்டுகளுக்கு முன் தோன்றியவர்தான், டாக்டர் சிவசங்கர நாராயண பிள்ளை. பெயர் மிக நீளமாக இருப்பதாகக் கருதி பிறர் சவுகரியத்துக்காக எஸ். எஸ். பிள்ளை என்று பிற்காலத்தில் சுருக்கிக்கொண்டார். மிக ஏழ்மையான குடும்பத்தில் பிறந்தார். பெற்ரேரையும் இளமையிலேயே இழந்தார். நெருங்கிய ஒரு உறவினர் ஆதரவில் வளர்ந்து வந்தார்.

“என் தந்தை எனக்கு வாழ்வை ஈந்தார். ஆசிரியரான அரிஸ்டாட்டில் எனக்கு நல்வாழ்வை

ந்தார்" என்று அலக்சாண்டர் ஒரு முறை கூறிய தாகச் சரித்திரம் சொல்லும். பிள்ளையவர்கள் கரு விலேயே கணிதத்திரு இருக்கிறது என்று கண்ட அவர் ஆசிரியருள் ஒருவர் அவரைத் தந்தையினும் இனிய பரிவோடு ஆதரித்து வந்தார்.

இன்றும் வருவது கொல்லோ நெருநலும்
கொன்றது போலும் நிரப்பு

என்ற மிக நெருங்கிய நிலையில் பிள்ளையின் இளங்கால வாழ்வு நடந்தேறியது. ஆயினும் மேதை இவற்றைத் தாண்டிச்செல்லும் வன்மையது. நிச்ச நிரப்பாம் அளறிலும் தாமரைபோல் மலர்வது. செங்கோட்டையில் ஐஸ்கூல் படிப்பை முடித்து, நாகர்கோயிலில் இன்றர்மீடியட் படிப்பைமுடித்து பிள்ளை திருவனந்தபுரத்து அரசர் கல்லூரியில் பி. ஏ. படிக்கச் சென்றுவிட்டார். ஒவ்வொரு வகுப் பிலும், அந்த வகுப்புக்கணித ஆசிரியர் வியக்கவும், புகழவும், பொறாமை கொள்ளவும் அவர் மேதை விளங்கியது. ஒவ்வொரு வகுப்பிலும் அந்த வகுப் புப் பாடங்களைப் பல்படி தாண்டிய கணிதப் புதிர் களிலேயே அவர் கவனம் முற்றும் சென்றது.

பி. ஏ. தேர்தலில் கணிதத்துறையில் இரண்டா வது வகுப்பிலேயே பிள்ளை தேறினர். சற்றுச் சாதாரணமானவர்கள் கூட பி. ஏ. வகுப்புக் கணி தத்தில் முதல் வகுப்புத் தேறிவிடக்கூடும். முதல் வகுப்பில் தேற மேதை வேண்டியதில்லை. அங்ஙன மாக மேதையான பிள்ளை இரண்டாம் வகுப்பில் தேறியது என்ன குறைபாடால்?

குறைபாடாலல்ல, நிறைபாடு ஆகும். பி.ஏ. வகுப்பில் படிக்கும்போது அவர் எம். ஏ. வகுப்பையும் தாண்டிய பெரிய ஆராய்ச்சியாளரும் கண்டறியாத கணிதப்புதிர்களுக்கு விடை கண்டு கொண்டிருப்பாராயினர். பரீட்சை வினைத்தாள் வந்ததும் அவர் தாம் அதுகாறும் வாழ்ந்த எட்டாத கொம்பிலிருந்து தரைமட்டத்திற்கு வரவேண்டியதாயிற்று. மேதைகளோடு போட்டுக் கொண்டிருந்த சிந்தனை உலகப்போட்டியிலிருந்து சாதாரண மாணவர்கள் போட்டுக் கொண்டிருந்த மார்க்குத்தரை மட்டப் போட்டியில் கலக்க வேண்டியதாயிற்று. ஆகாய விமானத்தில் அற்புத கரணங்கள் போடும் ஒரு மாலுமியைக் கழைக் கூத்தாடிகளோடு போட்டி போடச் செய்தாலோ? மாங்காய்ப் பாலுண்டு மலை மேலிருப்போரைத் தேங்காய்ப் பாலுண்ணச் செய்தாலோ?

ஆசிரியரின்றித் தாமாகவே கல்வி பயின்றதாக ஏகலைவன் ஒருவனையே கதைகள் சொல்லும். ஏகலைவன் கூடத் துரோணன் உருவச்சிலையொன்று செய்தும், துரோணன் அரசிளங் குமாரருக்குக் கற்பிப்பதை மறைந்து நின்று கண்டும், கலைவல்லுநனுகினன் என்பதுதான் பிரமாணம். பிள்ளையோ தாம் கற்ற கணிதமெலாம் எந்த ஆசிரியர்பாலும் கற்றதல்ல. எந்த ஆசிரியரைப் பார்த்தும் கற்றதல்ல. பலமுறை ஆசிரியர் தடைகளை மீறிக்கற்றவை. கல்லாமே வந்த மேதை வித்தை.

மேதை என்பது தொண்ணூற்றென்பது பங்கு உழைப்பு ; ஒருபங்கு அருள் என்று எடிசன் வருணித்தாராம். பிள்ளையின் உழைப்பும் பேருழைப்பின் வகையைச் சார்ந்தது. கணிதமன்றி உலகில் அவர் வேறு கருமமறியார், இரவு பகலென்று, பலநாள் கண்துஞ்சார், மெய்வருத்தம் பாரார். எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார். எடுத்த கணிதப்புதிருக்கு விடை காண்பதொன்றே கண்ணாயிருந்தார்.

சென்னைப் பல்கலைக்கழக விதிகளின்படி ஒருவர் கணிதத் துறையிலோ மற்றெந்தத் துறையிலோ ஆராய்ச்சி மாணவராய் அனுமதிக்கப் படுமுன் அவர் குறைந்தது பி. ஏ. ஆனர்ஸ் வகுப்பில் தகுந்த முறையில் தேர்வடைந்திருக்க வேண்டும். பிள்ளையோ பி. ஏ. வகுப்பில் மிக மட்டமான முறையில் தேறியிருந்தார். ஆயினும் சென்னைப் பல்கலைக் கழகத்தார் இவரை பி. ஏ. ஆனர்ஸ் தேர்வில் தேற வேண்டுமென்று கட்டாயஞ் செய்யாது விதியை நெகிழ்த்தி ஆராய்ச்சி மாணவராய் நியமித்தனர்.

பெரும்பாலும் அரசாங்கத்திலோ அரசாங்க முறைகளை அடிச்சுவடி பற்றி நடக்கும் பல்கலைக் கழகத்திலோ இவ்வாறு நடைபெறுவதில்லை. முன் ஒருகால் மற்றொரு கணித மேதை இராமநுஜம் இவ்வாறு விதிப்படி பெறவேண்டிய தகுதியைப் பெறாமையால் கும்பகோணம் கல்லூரியின் ஆதரவைப் பெறத் தவறியதும் பின் அவர் மேதையை மேனாட்டுக் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தார் கண்டு

ஆதரித்ததும் சென்னைப் பல்கலைக் கழகத்துக்கு அழியாத ஒரு மாசாகி விட்டது. இந்த மாசு நீங்கவோ என்னவோ பிள்ளையை அவர்கள் விதிக்கு விலக்காய்ச் சேர்த்துக் கொண்டார்கள்.

இப்படியாக விதியை நெகிழ்த்தும் வகையிலே மிக அடிப்படையாக இருந்தவர் காலஞ் சென்ற சின்னதம்பிப் பிள்ளையவர்கள். இவர்கள் பச்சையப்பன் கல்லூரி பிரின்ஸ்பாலாக பல ஆண்டுகள் தொண்டு புரிந்து வந்தார்கள். பி. ஏ. பட்டம் தான் பெற்றிருந்தும், கணிதத் துறையில் ஒரு ஆசிரியராக இருந்தார். இவர் அன்றையப் பல்கலைக் கழக அமைச்சுக் குழுவில் இடம் பெற்றிருந்தார். கணிதத்தைப் பற்றி வரும் விவகாரங்களில் சின்னதம்பிப் பிள்ளையின் கருத்தையே எல்லோரும் ஏகமனதாய் ஒத்து வந்தனர். சாமான்யர்க்கு விதித்த விதிகள் மேதைகளுக்குச் செல்லுபடியாகா என்று ஸின்றிகேட்டில் சின்னதம்பிப் பிள்ளை வற்புறுத்தியதன்பேரில் எஸ். எஸ். பிள்ளை ஆராய்ச்சி மாணவராக அனுமதிக்கப்பட்டார்.

பிள்ளையாவது ஒருவாறாக பி. ஏ. வகுப்பில் தேறினார். ஆனால் இவருக்கும் முன்னிருந்த ஒரு கணித மேதை எப். ஏ. கூடத் தேற முடியாதவராக இருந்தார். கும்பகோணம் கல்லூரியில் எப். ஏ. வகுப்பில் பயிலுகையில், கணித மாது இராமானுஜத்தைக் கொள்ளை கொண்டுவிட்டாள். ஏனைய துறைகளான ஆங்கில இலக்கியம், சரித்திரம், உடல்

நூல் முதலிய அனைத்தையும் அவர் மறந்தார். வகுப்பில் என்ன நடப்பதென்று தெரியாமலே தன் கணித உலகத்திலே மூழ்கியிருந்தார். இதனால் எப். ஏ. வகுப்பில் தேற முடியாது தெலுங்கு தேசத்துக்கு ஓடிவிட்டார். "மேதை தான் கருதியதையே செய்கிறது. திறன் முடிந்ததைச் செய்கிறது" என்பது ஒரு மேனாட்டுப் பழமொழி.

பிள்ளை செங்கோட்டையிலிருந்து புறப்பட்டுச் சென்னைக்கு வந்ததே ஒரு கதை. பரீட்சை முடிந்ததும், இவரது அபாரக் கணித ஞானத்தையும், ஆராய்ச்சித்திறனையும் அறிந்த ஆசிரியர் அதுகாறும் இவர் செய்துமுடித்த முடிவுகளையெல்லாம் திரட்டிச் சென்னையில் சில நண்பர்களுக்குக் கடிதங்களும் கொடுத்து வாழ்த்தி வழி அனுப்பி வைத்தார். பிள்ளையோடு ஒருசாலை மாணாக்கராக இருந்த அவர் இனத்தவர் ஒருவர், நெருங்கிய உறவினர் அப்பொழுது பிரபல வக்கீலாகச் சென்னையிலிருந்தார். அன்றைய நீதிக்கட்சி அரசியலிலும் இந்த வக்கீல் பிரமுகருக்குச் சிறப்பான செல்வாக்கிருந்தது.

சென்னைக்குப் பிள்ளை கொண்டு வந்த கடிதங்களிலே ஒன்று இந்தப் பிரபலஸ்தருக்குமாகும். யாருமே தமக்கு நிகரில்லையென்றும் தாம் அறியாத கலையை எவருமே அறிந்ததில்லை யென்றும் கருவித்திருந்த இந்த வக்கீல், பிள்ளையின் ஏழ்மை நிலையையும் தாழ்மைத் தோற்றத்தையும் கண்டு எள்ளி நகையாடினாராம். கணிதத்திலென்ன ஆராய்ச்சி என்று

நையாண்டி செய்தாராம். மனமுடைந்த இளைஞரான பிள்ளை மதியாதார் முற்றம் மிதிக்க வேண்டாம் என்பதற்கிணங்க அன்று முதல் தம் இனத்தவர் உதவியையே நாடுவதை விட்டார். சமூக நலமென்று பிதற்றிச் சுயநலம் பேணித்திரியும் பலரைக் கொண்டது அரசியல் கட்சிகள் என்று அடிக்கடிச் சொல்லுவார். இறுதி வரையிலும் அரசியல் அதிகாரத்தில் இருப்போர் அகத்தை எட்டியும் பாரார்.

பல்கலைக் கழகத்தில் நான்காண்டு விடாது ஆராய்ச்சி செய்து எம். எஸ். ஸி. பட்டம் எடுத்தார். இவருடைய ஆராய்ச்சி முடிவுகளைக்கண்ட பரீட்சையாளர்கள் ஏன் இவர் இவ்வாராய்ச்சிகளை எம். எஸ். ஸி, பட்டம் பெறுவதற்காகச் சமர்ப்பித்தாரோ, மேல் பட்டமான டி. எஸ். ஸி. பட்டத்துக்குச் சமர்ப்பித்திருக்கலாமே என்று மெச்சி எழுதியிருந்தார்களாம். விரைவில் டி. எஸ். ஸி. பரீட்சையிலும் தேறி டாக்டர் பட்டம்பெற்ருர்.

பட்டங்கள் எடுப்பதற்கு முன்னும் பின்னுமாக இருபதாண்டுகளுக்கு மேல் அண்ணமலை, திருவாங்கூர், கல்கத்தா ஆகிய மூன்று பல்கலைக் கழகங்களிலும் பிள்ளை விரிவுரையாளராகவும் ஆராய்ச்சி ஆசிரியராகவும் வேலை பார்த்தார். மாணவர்கள் அன்பையும் மற்றைய ஆசிரியர் அன்பையும் நிறையப்பெற்ருர். தனக்கு வழி காட்டியாகவும் உறுதுணையாகவும், இருந்த பல ஆசிரியர்களையும், நண்பர்களையும் கூறுகையில் சிறப்பாகக் கால்ஞ்சென்ற

கணிதப் பேராசிரியர் சேஷு ஐயர், சென்னைப் பல்கலைக் கழகத்தின் நூல் நிலையப்பாதுகாப்பாளர் ரங்கநாதன், டாக்டர் வைத்தியசாமி, டாக்டர் விஜயராகவன், டாக்டர் நரசிங்கராவ் முதலியோரைக் குறிப்பிடுவார். அரசாங்கத் துறையிலே மத்திய சுங்கவரி இலாகாவிலிருக்கும் சட்டநாதனுக்கும் பிள்ளைக்கும் இளமை தொட்டே நெருங்கிய நட்பு. ஒரு பகைவன் என்று அவருக்கு இருந்ததாக இல்லை.

பிள்ளை ஆராய்ச்சித் துறையிலே ஒளிபெற்று உயர்வதைக் கண்ட அவரினத்தவருள் தனவந்தரானவரும், அதிகாரிகளானவரும் பலர் தங்கள் பெண்மக்களுக்கு இவர் ஏற்ற கணவர் என்று நம்பி இடந்தேடி வரலாயினர். பிள்ளை மனம் பணத்தையும் நாடவில்லை; உயர்ந்த இடத்து உறவையும் நாடவில்லை. தம்மையொத்த எளியவரான இந்துக் கல்லூரி தமிழ்ப்பண்டிதர் அருணாசலம் பிள்ளை மகளையே மணந்தார். மனைவி பால் மட்டற்ற காதல் கொண்ட கணவர். உலவா இன்ப இல்லறம் நடத்தி இருவரும் காதலொருமித்துப் பெற்ற மக்கள் மூவர் இப்பொழுது சுகமாக வாழ்கிறார்கள்.

மேதை மனம் கயவர் போன்றும், தேவர் போன்றும் "மேவிய செய்தொழுகும்". தாம் எதைச் செய்ய விரும்புகிறார்களோ அதையே விடாது செய்வார்களேயன்றி, பிறர் வேண்டவோ அல்லது பிறிதுபயன் கருதியோ செய்வார்களல்லர்.

கணிதத் துறையிலே பற்பல பகுதிகளிருக்கின்றன. இவற்றுள் இலக்கங்களில் தத்துவத்துறையிலேயே பிள்ளையின் மனம் இளமை முதல் சென்றது. இந்தத் துறையில்தான் மேதை இராமாநுஜமும் உழைத்தது. இந்திய நுண்ணறிவுக்குத் தொன்று தொட்டே ஒருவித வசீகரம் கொடுத்து வந்த துறை என்று கணிதசரித்திர அறிஞர் கருதுகின்றனர்.

இலக்க தத்துவத் துறையில் பிள்ளையோடு ஆசிரியர் சௌலா என்ற ஒரு வடநாட்டவரும் அரிய ஆராய்ச்சிகளைச் செய்துவந்தார். இருவரும் கடித மூலம் பல கணித நுட்பங்களை எழுப்புவதும் விடை காண்பதுமாகப் பல ஆண்டுகள் போக்கினர். இவ்விருவரன்றியும், டாக்டர் விஜயராகவனும் இந்தத் துறையில் சிறிது உழைத்திருக்கிறார். வட நாட்டில் குப்தா என்பவரும் ஏறக்குறைய இந்தத் துறையை அடுத்துப் பல நுட்பங்கள் கண்டு வருகிறார். இவருள் பிள்ளையே தலைசிறந்தவர்.

இலக்கத் தத்துவத்திலே 1770-ம் ஆண்டில் வாரிங் என்பவர் ஒரு கணக்குப் போட்டுப் போனார். அதற்கு வேண்டிய ருசுவை அவர்விளக்க வில்லை. பின்னே அதற்கு ருசுக்காண எத்தனையோ பேர்முயன்றார்கள். பிரபல கணித ஆசிரியர்களான கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலையைச் சார்ந்த ஹார்டி, லிட்டில்வுட் போன்றவர்களெல்லாம் அதற்குத் தகுந்த ருசு காண முயன்றும் பயன் படவில்லை. டாக்டர் பிள்ளை தக்கதொரு ருசு கண்டு நூல்

வடிவாக வெளியிட்டார். அவர் புகழ் உலகப் புகழாய் உயர்ந்தது. இதுவன்றியும் வேறு சிறந்த ஆராய்ச்சிக் கட்டுரைகளை வெளியிட்டுள்ளார். ராமானுஜம் "நாமக்கல் அம்பாள் அருள்சக்தி"யால் கண்ட பல கணிதப் புதிர்களுக் கெல்லாம் பின்னே வந்த பிள்ளை விஞ்ஞான முறையில் எல்லோரும் ஒப் பத்தகுந்த ருசுக்கள் கண்டார்.

ஆயினும் இந்தியக் கணிதசங்கம் பிள்ளையின் மேதைக்குத் தகுந்தவாறு அவரைப் போற்ற முற் படவில்லை. இளமையின்பால் முதுமை கண்ட அழுக்காறுயிருக்கலாம். இ. டி. பெல் என்ற புகழ் பெற்ற மேனாட்டுக் கணித அறிஞர் உலகத்தில் ஒவ் வொரு நாட்டின் கணித மேதைகளையும் பற்றி எழுத வந்த இடத்தில், இந்தியாவைப் பற்றிச் சொல்லும் போது உலக வரிசையில் வைத்தெண்ணும் படியாக இருவரையே குறிப்பிடுகிறார். ஒன்று இராமாநுஜம், மற்றொன்று எஸ். எஸ். பிள்ளை (மென் ஆப் மாத்த மாட்டிக்ஸ்) என்ற நூல் வெளியானதும் பல இந் தியக் கணித அறிஞர் அவர் மாட்டுப் பொறாமை கொண்டனர். நல்ல காலமாய், பிள்ளை விளம்பரப் பிரியராயில்லை. எவரோடும் இணக்கமாய் வாழும் பண்பினர் (ஓரளவுக்கு கோழை என்றே சொல்ல வேண்டும். கல்கத்தாவில் கலகம் என்று கேள்விப் பட்டதும் தலைகால் தெரியாமல் விழுந்தடித்து ஓடி வந்தார்.) குடத்துளிட்ட விளக்குபோல் வாழ இசைந் தும் உரிய இடத்தை அளிக்க மறுத்தது இந்தியக் கணித சங்கம்.

ஆனல் பிள்ளையின் புகழும் ஆராய்ச்சி ஒப்பமும் இங்கிலாந்து சென்று, அங்கிருந்து அட்லான்றிக் கடல் கடந்து அமெரிக்காவை எட்டின. இந்தியக் கணித சங்கம் கொடுக்காத மரியாதையை உலகக் கணித சங்கம் கொடுக்க அழைத்தது. இந்தியப் பல்கலைக் கழகங்கள் கொடுக்க முடியாத பெரும் பதவியை உலகத்திலேயே கணிதத்துறையில் முதன்மை பெற்று விளங்கும் பிரின்ஸ்டன் பல் கலைக் கழகம் கொடுக்க முன் வந்தது.

அமெரிக்காவிலிருந்து அழைப்பு வந்ததென்று பெருமை கொண்டோம். எமன் விடுத்த இரகசிய அழைப்பென்று அறியாதிருந்து விட்டோம். "மேரிலாந்தின் நட்சத்திரம்" என்ற விமானம் எகிப்திய பாலைவனத்தில் எரிந்து விழுந்ததும், உண்மையில் விழுந்தது கணித வானத்தில் ஒளி விட்டுக் கொண்டிருந்த ஒரு ஒப்பற்ற நட்சத்திரமே. இலக்கம் என்ற ஒரே துறையில் உழைத்த இரு பெரு கணித மேதைகள், தாய் நாட்டுக்கே தனிப்புகழ் தேடித் தந்த இருநல்இளைஞர்கள் இராமானுஜம், சிவசங்கர நாராயணப்பிள்ளை இருவரும் தாய் நாடு துறந்து அயல் நாட்டில் இறந்தனர். பாரத பூமி உண்மையிற் புண்ணிய பூமிதானு?

எப்பொழுதும் இளநகை தவழும் முகம். எல்லோர்க்கும் இனிய உரையாடும் சீலம். எவரிடமும் இல்லாத உயர் குணம், அன்பரை உபசரிக்கும் இன்ப ஒழுக்கம். சுருண்டகுஞ்சி: தயங்கித் தயங்

கிப் பேசும் இனிய மொழிகள் ; கள்ளரையும் வெல்ல வல்ல வெள்ளை உள்ளம்—இவற்றை அறிந்தோர் எங்ஙனம் மறப்பது ? பிள்ளைப் புகழுடம்பு நின்றது. பூத உடம்பு போனதெங்கே ?

காடோ செடியோ கடற்புறமோ கனமே மிகுந்த
நாடோ நகரோ நகர் நடுவோ நலமே மிகுந்த
வீடோ புறந்திண்ணையோ தமியேனுடல் வீழுமிடம்
நீடோய் கழுக்குன் றிலீசா ! உயிர்த்துணை நின்பதமே

—பட்டினத்தடிகள்.

12-0701

பவானி அச்சகம், எழும்பூர், சென்னை-8.